உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

# தண்டகம்-110.

## வைத்திய சூஸ்த்திரம்-55

இடைபாகம்--16 செய்பாகம்--16ம், சேர்ந்தது.

இஃது

மதுரை யானைக்கல் தெரு, வித்துவான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

ஏட்டுப்பிரதியின்படி

மதுரை வித்வான்

**த. குப்புசாமி நாயுடு அவர்களால்**

பரிசோதித்தபடி,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

**குருசாமிக்கோனார் சன்**

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு.

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1939

காபி ரைட் ) மூன்றாம் பதிப்பு (விலை அணா 12

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# தண்டகம்—110.

ஆதியே அண்டபிண்ட மருளே காப்பு
ஆகாச நாதசத்தி அறிவே காப்பு
சோதிமணி விளக்கொளியின் விந்து காப்பு
சொற்பெரிய நபிமார்கள் பாதங் காப்பு
நீதிமறை வேதகுரு பாதங் காப்பு
நித்திய நிராமயமாய் நிறைந்தோன் காப்பு
பாதிமதி யிரவிதனை அணிந்தோன் காப்பு
பரப்பிர்ம சொரூபத்தின் பாதங்காப்பே. (1)

பாதமென்ற பதியறிந்தேன் பரத்தினாலே
பராபரத்தின் பொருளறிந்தேன் குருவினாலே
வேதமென்ற கருவறிந்தேன் அண்டத்தாலே
வேதாந்தத் தாயறிந்தேன் பிண்டத்தாலே
நாதமென்ற தசநாத மதியினாலே
நாதாந்த ரவியினுட விவேகத்தாலே
காதமல்லை தூரமில்லை பூரணத்தாலே
கண்டறிந்த யாகோபு கருவாய்த்தானே. (2)

கருவான நாதமென்றும் விந்துவென்றும்
கருத்தில்மனக் கசடதென்று மருள்தானென்றும்
அருவான அண்டமென்றும் பிண்டமென்றும்
ஆகாச பரப்பிர்ம சொரூபமென்றும்
மருவான மதியென்றும் ரவிதானென்றும்
மகத்தான கேசரியின் மகிமையென்றும்
தருவான தாரணியில் தலைப்பெண்ணென்றும்
தான்மயங்கித் திரிவார்கள் சண்டிமாடே. (3)

திரிவார்கள் தேசத்தி லனேகப்பேர்கள்
செயலான பலபிணியின் கருவைக்காணர்
அறிவார்கள் அறிவாலே குருவின்பீடம்
ஆனந்த சற்குருவின் கருவின்பீடம்
தெரியாம லலேவார்கள் என்றேசொல்லிச்
சிறப்பான தபிமார்கள் வெகுபேர்கூடி
குறிப்பாக தண்டகமாய்ச் சொல்லென்றார்கள்
குருவாக அன்னாளிற் சொன்னேனனே. (4)

அன்னாளில் யான்று னும் ராமதேவ
ராயிருக்குங் காலமதி லாயிரந்தான்
முன்னாகப் பெருநூலாய்ச் சொல்லிவிட்டேன்
முடிவாகத் தெரிந்தோனே சித்தனுவான்
இன்னாளித் தண்டகந்தான் சொல்லவென்றால்
இயல்பாயா யிரத்தைவிட வேறொன்றில்லை
சொன்னாலு மதைக்குறுக்கிச் சொல்லவேண்டும்
சொல்லகன்று போகாயாக் கோபுதானே. (5)

அகன்றுபோஞ் சின்மயத்தின் பொருளைக்காண
ஆகாரா யாராலு முடியுமோசொல்
திகன்றுபோஞ் சிதம்பரத்தின் பொருளைக்கண்டால்
தேவாதி தேவர்களு மீடாவாரோ
புகன்றனக்கு தண்டகத்தின் கருவையெல்லாம்
போக்கோடே சொல்லுகிறேன் புகழாய்க்கேளு
இகன்றுபேர் வரையாறுந் தாண்டும்யாகோப்
ஏரண்டம் பேரண்டம் ஏறினேனே. (6)

ஏறினேன் ஆறுவரை யடுக்குங்கண்டேன்
ஏகாச்ச ரத்தினுட பொருளுங்கண்டேன்
மாறினே னைம்பத்தோ ரச்சரத்தில்
மகத்தான ஒளிகண்டேன் வெளியுங்கண்டேன்
சீறினேன் பதினெண்பேர் முறையுங்கண்டேன்
சிறப்பாகத் தண்டகத்தின் கரையுங்கண்டேன்
தேறினேன் அனேகநூல் யாகோப்சொன்னேன்
தேவியென்ற வாலையைத்தான் தெரிசித்தேனே.

தெரிசித்தேன் சபையாறுஞ் சுற்றிக்கொண்டேன்
தெண்டகத்தை மறையாமற் சொல்லிவிட்டேன்
அரிசித்தே னருள்சார்ந்த பஞ்சகர்த்தாள்
ஐவரையும் பூசித்தேன் அருமையாக
பரிசித்தேன் பஞ்சவர்க ளைந்துபேரைப்
பணிந்திட்டேன் சிரசுமுடி பாதங்கண்டேன்
வருசித்தேன் பற்பநதி கங்கையாடி
மகத்தான யாகோபு மகத்துவம்பாரே. (8)

பாரப்பா பெருநூலின் கருக்களெல்லாம்
பார்தனிலே ஆராறியப் போருமப்பா
சீரப்பா தண்டகமா மிந்நூல்தன்னில்
செகமாய்கை யைவிலக்குஞ் சூட்சாசூட்சம்
தேரப்பா யிந்நூலின் பொருளைக்கண்டு
செகந்தனிலே மானீடர்க்கு யாகோப்சொன் (னேன்
ஆரப்பா அறிவார்கள் தண்டகத்தை
அவனிதனில் மெய்ஞ்ஞானி அறிவார்தாமே.

ஆமப்பா பராபரத்தின் மகிமையாலே
ஆதிசிவ நாதவிந்து அகண்டமீறி
வாமப்பா கேசரத்தில் மனதைக்கொண்டேன்
மகத்தான பூரணத்தில் மோட்சம்பெற்றேன்
காமப்பா நாதவல்லி காமரூபி
கைக்கொண்டாள் கேசரியின் கருவைச்சொன் (னாள்
சோமப்பா லெனக்களித்தாள் வாமரூபி
சொல்லிவிட்டே னுயிரத்தில் வெளியாய்த்தானே.

வெளியாக அகாரவுகா ரத்தைக்கண்டேன்
வேதாந்த ஓங்கார மூன்றேமூலம்
ஒளியாகப் பரங்கண்டேன் பரவெளியுங்கண்டேன்
ஓகோகோ அமிர்தநதி துரியங்கண்டேன்
அழியாத ஆதார நிலையுங்கண்டேன்
அப்பாலும் பற்பநதி சுழியுங்கண்டேன்
வழியான ஆறுவரைப் பூட்டுங்கண்டேன்
மகத்தான தசதீட்சை வளங்கண்டேனே. (11)

கண்டேனே சிவதீட்சை சத்திதீட்சை
கதிதரு நந்திதீட்சைக் கருளும்பெற்றேன்
பெண்டான மவுனசிவ யோகம்பெற்றேன்
பேரான அஞ்செழுத்தின் விபரம்பெற்றேன்
தெண்டான திசைநாத பீடம்பெற்றேன்
தெளிவான பூரணத்தின் கிருபைபெற்றேன்
தொண்டரா யிருந்துமே வாழும்பெற்றேன
சுகமாக யாகோபு தலங்கண்டேனே. (12)

தலமான ஆறுதலப் பூட்டுங்கண்டேன்
சற்குருவா லதைத்திறக்க அறிவுங்கண்டேன்
வலமான சிவசத்தி பூசைகண்டேன்
மகத்தான சஞ்சார சமாதிகண்டேன்
பெலமாம்பே ரண்டம்யே ரண்டங்கண்டேன்
பேரொளியின் வாலைமனோன் மணியைக்கண்
குலமான தாலுவசை சாதிகண்டேன் (டேன்
குருவிருக்கு மாயிரத்தெட் டிதழ்கண்டேனே ()

உருவான பொருளறிந்தேன் யாகோபென்பேர்
ஓகோகோ ஒருவராற் காணப்போமோ
சுருவான சூட்சமடா சொரூபானந்தம்
சூட்சசடா தாரத்தின் பீடஞ்சொல்வார்
அறிவான ஆதியப்பா ஆதியந்தம்
அகண்டவெளி துரியமடா துரியாதீதம்
கருவான காமியடா வாலைப்பெண்ணைக்
கண்டேனே பிண்டமதின் கருச்சொன்னாளே.

சொல்லியவள் யாகோபு யெனக்குத்தானும்
சொற்பெரிய அமுர்தமதைச் சொரிந்தாளாத்
வல்லியவள் காமிசிவ காமிரூபி (தாள்
வரங்கொடுத்தாள் தன்னருளால் வாங்கிக்கொ
மெல்லியவளுபதேசஞ்சொன்னாளாத்தாள் (ண்டேன்
விவேகமுள்ள கருவறிந்து அஞ்ஞானத்தை
சல்லியகை பாகஞ்செய் பாகஞ்சொன்னாள்
சதாகோடி வித்தையெல்லாம் ஆடினேனே (15)

ஆடினேன் திருநடனத் தாண்டகமாமிந்த
 ஆயிரத்தின் சூஸ்திரத்தைப் பதனப்பண்ணு
பாடினே னபிமார்கள் கிருபையாலே
 பண்பாக யானிகண்டு பாடினேன்பார்
தேடினேன் மவுனசித்துப் பாஷைதன்னைத்
 தீர்க்கமாய்த் தெரிந்தபின்பு தெளிவாய்ப்பேசி
சூடினேன் சூஸ்திரத்தை வெளியில்விட்டேன்
 சொற்பெரிய சித்தரையு மயக்கும்பாரே. (16)

பாரே நீ யிந்நூலை யுற்றுப்பார்த்தால்
 பலதொழிலின் சூட்சமெல்லாம் வெளியாய்த்
மாரே நீ மந்திரங்கள் சக்கரங்கள் தோணும்
 மகத்தான தசதீட்சை மவுனக்கியானம்
தேரே நீ குருவழிலே முப்புச்சுண்ணம்
 சிறப்பான சமாதுகர்ப்பம செய நீர்பாகம்
காரே நீ காயாதி கற்பத்தோடு
 கனகுளிகை செந்தூரங் கருவதாமே. (17)

ஆமப்பா அஷ்டமா சித்திதானும்
 அளவறந்த மைதிலதம் வசியத்தோடு
வாமப்பா அஞ்சனமு மாற்றந்தானும்
 மகத்தான பெழுகினுட குடுவின்கூறும்
வேமப்பா வேதையென்ற சரக்கின்கூறும்
 விளம்பினர் யாகோபு விபரத்தோடே
நேமப்பா நிஷ்டையுடன் சிவயோகந்தான்
 நிகரில்லா ஞானமொடு நேர்மைதானே. (18)

தானவனாய் நின்றவர்க்கே யெய்துமெய்தும்
 தாரணியி லல்லவார்க்குப் பலியாதப்பா
நீனே நானென்றுசொல்லி லோகமாண்பார்
 நீணிலத்தில் மெத்தவுண்டு நிகழ்த்தவென்றால்
வாயேதான் திறவாமல் மவுனங்கொண்டு
 வையகத்தோ ரைமயக்கி மாண்டார்கோடி
ஆயேநான் சொன்னபடி குருவிடத்தில்
 அனேகநாள்தொண்டுபண்ணிப்பின் அருள்காண்பாயே.

மந்திரம்.

அருளான பொருளென்ற மாந்திரீகம்
அப்பனே சொல்லுகிறேம் உற்றுப்பாரு
மருளான மவுனமப்பா மூலாதாரம்
மகத்தான தம்பனமா மதிதவித்தை
விருளான மேலாறு வரைகள்கீறி
மெய்ஞ்ஞானக் குறுக்காறு வரையுங்கீறி
தருளான யிருபத்தஞ் சரையுமாச்சு
சமத்தாக மநயவசி யென்றுபோடே. (20)

போட்டவுடன் சொல்லுகிறே னின்னங்கேளு
புகழாக நாதசத்தி பீஜமாறு
ஆட்டமுடன் ஆடுமப்பா அறீம்இறீம்என்று
அம்மம்மா மறீமென்று உயிரெழுத்தின்பீஜம்
தாட்டமுடன் அவ்வும்உவ்வும் ஐயுமென்று
சார்பாகக் கிலியுஞ்சௌவும் என்றுமாறு
வாட்டமுடன் தேகம்பதி னெட்டுமூன்றும்
வளமாக யிருவட்டங் கீறிக்காணே. (21,

காணப்பா அஷ்ட துர்க்கை அஷ்ட நாகம்
கருவான துவாரபாலர் கவதன்பீஜம்
பேணப்பா நாதவிந்து பீஜமாறும்
போரான மகாரயென்ற மவுனம்போடு
ஆணப்பா ரேகையென்ற யிருபதொன்றும்
அகாரமென்ற உகாரவரை மகாரமபோடு
நாணப்பா நகாரமென்ற சிகாரத்தோடு
நடுவணையைப் பிடித்துநீ மாறுமாறே. (22)

மாறுவாய் மவுனமென்ற யோகதிட்சை
மகத்தான நாதாக்க ளாருஞ்சொல்லார்
ஏறுவா யோகத்தி லிருக்கும்போது
ஏகமாய்ச் சக்கரத்தை வரைந்துகொண்டு
பேறுவாய் மவுனயென்ற யெழுத்தைமாறி
பெட்புடனே கற்பூரத் தீபங்கொண்டு
ஆறுவாய் வாயுவென்ற மூலாதாரம்
அப்பனே கும்பித்தோர் நிலையாய்நில்லே.(23)

நில்லெனவே நாளொன்றுக் கிருநேரமப்பா
நேர்மையுடன் தம்பித்தால் நிற்குணமுந்தோற்
வல்லெனவே வாயுவென்ற பீடந்தோற்றும் (றும்
மகத்தான சபையாறு மடைவாய்க்காணும்
புல்லெனவே பூரணத்தின் சோதிகாணும்
புகழ்பெரிய மனக்கண்ணை ஒட்டிப்பார்த்தால்
துல்லெனவே துரியமென்ற துரியாதீதம்
தோன்றியே யாகோபு பூசிப்பாரே. (24)

பூசிப்பாய் மவுனசிவ யோகதீட்சை
புகழாக ஒருநாழி தம்பித்தாக்கால்
ஆசிப்பாய் கனவுபோ லங்கேகாணும்
ஆனிருக்கும் விந்துநிலை வீடுங்காணும்
ஓசிப்பா ரொடுக்கநிலை பீடங்காணும்
ஓங்கார தலத்தம்பம் பரத்துநேர்மை
தாசிப்பார் கருவிகா ணுதியான
சடாதாரப் பொருள்காணுஞ் சார்ந்துபாரே. ()

பாரப்பா தம்பனத்தை ஒட்டிப்பார்த்தோம்
பராபரமாந் தரிசனத்தை உடனேகண்டோம்
நீரப்பா நிராதார பூரணத்தில்
நெடுநாளாய்ப் பூசித்தோம் பரங்கண்டோம்நாம்
ஆரப்பா அறிவார்கள் வாயுஸ்தம்பம்
அன்பாக யானறிந்தேன் சத்தியாலே
நேரப்பா அஷ்டகர்ம வித்தைதானும்
நிலையாக கரண்டாரோ மனிதர்தாமே. (26)

மனிதருக்கு மனோன்மணியுஞ் சொல்லுவாளோ
மணிமந்திர ரூபியவள் மனமகிழ்ந்து
அனிதமுட னருகில்வந்து யாகோப்பென்று
அஷ்டகர்ம மின்னதென்ற அருளைக்காட்டி
வனிதமுடன் வாயுவென்ற தம்பனந்தான்
மைந்தனே உந்தனுக்கு வாச்சுதப்பா
கனிதமுடன் குருவாந்தம் பனத்தைச்சொன்னேன்
கருவான சிதம்பரத்தின் தியானங்கேளே. (27)

கேளப்பா தண்டகத்தின் மகிமைதன்னைக்
 கிருபையுடன் பெருநூ லாயிரத்திலப்பா
ஆளப்பா ஆயிரத்தெட் டிதழுக்குள்ளே
 அரனிருந்த பரமப்பா ஆர்தான்சொல்வார்
வாளப்பா ஆயிரத்தை சுருக்கியாக்கோப்
 வசனித்தே னதைக்குறுக்கி நூற்றுப்பத்தில்
தேளப்பா கொட்டுதல்போற் சொல்வோமப்பா
 சிதம்பரத்தின் மகிமையுட திறந்தான்காணே.()

சிதம்பரச் சக்கரம்.

காணப்பா சிதம்பரச்சக்கரத்தைச் சொல்வோம்
 காசினியில் ஞானிகளும் உன்னிக்காணார்
ஆணப்பா அதீதகூத் திரந்தானிந்த
 ஆனந்த நடனஞ்செய் சுருக்கமப்பா
வாணப்பா வரையாறு மேலாறுங்கீறி
 மகத்தான ரேகையது வலமாய்க்கிறி
ஏணப்பா யிருபத்தைந் தரைக்குமிந்த
 இடம்வலமாய் ரேகையது யேகம்போடே (29)

போடப்பாசிவய நமவென்று போடு
 புகழாகச் சித்திக்கும் பேருண்டாகும்
ஆடப்பா அறுபத்து அஞ்சுமேரைக்
 ஐம்பத்தோ ரச்சரத்தின் பீஜமாறு
தேடப்பா வயநமசி சிறீம்கிறீம்சிங்கிலிஓம்
 திறமாகக் கிருங்கிறியும் சௌவும்போடு
மாடப்பா மசிவயந மறீம்உறீம்மென்று
 மகத்தான அவ்வும் உவ்வும் மாறுமாறே. (30)

மாறப்பா நயவசிம வென்றுமாறு
 மகத்தாக யாகோபு அறிந்தவித்தை
வாறப்பா வசிமநய வென்றுபோடு
 வளமாகச் சதுரவரை கீழ்மேற்போடு
ஆறப்பா அஷ்டதுர்க்கை அஷ்டசத்தி
 அஷ்டமா காளியுடன் அஷ்டநாகம்
தீறப்பா திசைமூலந் துவாரபாலர்
 றீம்றீம்றீம் அறீங்கென்று போட்டுப்பாரே(31)

அறீங்கென்று அச்சரமாம் றீங்காரம்போடு
அங்கென்ற வங்கதிலே கிறீமென்றேசொல்
பங்கென்ற மூலமப்பா றீங்காரம்போடு
பரமென்ற பராபரமாம் சவ்வுங்கூட்டி
மங்கென்ற பீஜமதில் மவ்வும்போடு
மகத்தான சிதம்பரத்தின் மகிமைபாரு
எங்கள்குலம் ஆதியிலே மறவரப்பா
இப்போது யாகோபா யிருந்தோம்பாரே. (32)

பாரப்பா சிதம்பரச்சக் கரத்தைநாமும்
பாடினேந் தண்டகத்தில் பரிவாய்க்கேளு
ஆரப்பா அறிவார்கள் ஆதியந்தம்
அம்பரத்தின் நடனவொலி ஞதஓசை
சேரப்பா ஜெயகண்டி சங்குநாதம்
ஜெயபேரி டமாரஒலி தாளந்தாரை
காரப்பா துந்துமியின் நாதத்தோடு
கடாட்சிப்பாய் சிதம்பரத்தைப் பூசிப்பாயே.(33)

பூசிப்பாய் சிதம்பரச்சக் கரத்தைமைந்தா
புகழாக வில்வத்தாற் பூசிப்பாய்நீ
ஆசிப்பாய் ஆயிரத்தெட் டிதழாமைந்தா
அகண்டமென்ற மண்டலத்தி லாறுஞ்சித்தி
பாசிப்பயர் சர்க்கரையுந் தேங்காய்ப்பாலும்
பாயாசம் பலகனியும் படைத்துமைந்தா
நாசிப்பாய் நவசித்தர் மூலமப்பா (தானே
நான்வெளியாய்ச் சொல்லிவிட்டேன் முத்தி ()

முத்தியிந்தச் சிதம்பரத்தில் மோட்சம்மோட்சம்
முக்கியமாய்ச் சொல்லிவிட்டேன் செய்துபாரு
சித்தியிந்தச் சிதம்பரத்தின் பாகமெல்லாம்
செயமான முன்னூலை யெடுத்துப்பாரு
அத்தியென்ற அரனருளா லிந்நூல் நூறில்
ஆடலாங் கோடான கோடிவித்தை
புத்தியுடன் யாகோபு திறந்துசொன்னேன்
பொல்லாத காமுகர்க்கு வாயாதென்னே. (35)

என்னவே சிதம்பரச்சக் கரத்தைச்சொன்னேன்
இயல்வாலை சக்கரத்தை யினிமேற்கேளு
அன்னவே அறுகோண மிட்டுத்திரு
அரகரா அதுநடுவில் முக்கோணந்திரு
வன்னவே நாற்சவுக்கம் வரைகள்போடு
மகத்தான யெண்கோணஞ் சுற்றிக்கீறு
ஒன்னவே ஒருவட்டஞ் சுற்றிப்போடு
ஓங்கார வட்டமாம் வரைபத்தாமே. (36)

ஆமப்பா வரையுள்பனி ரெண்டாய்க்கீறு
அப்பனே நாற்பத்தி முக்கோணவீடு
வாமப்பா வடபக்கம் முக்கோணத்தில்
மவ்வும்உவ்வும் அவ்வுமென வகையாய்மாறு
தேமப்பா தென்பக்கம் அறுகோணத்தில்
சிறீம்ஹ்றீம்சிங் ஓமென்று தெளிவாய்ப்போடு
நாமப்பா சொல்லிவிட்டோம் ரங்மங்கென்று
நாதாக்க ளாருந்தான் சொல்லார்பாரே. (37)

பாரப்பா நாற்சவுக்கம் வரையிலேதான்
பரப்பிர்ம சொருபமென்ற மகாரம்போடு
ஆரப்பா உனக்கீடு ஒருவருண்டோ
ஆச்சரிய மாச்சரிய மாயியாட்டு
நேரப்பா சதுரவரை சங்குசிங்கு
நேரான ஹ்றிஓம்ஹ்றயிம் அடைவாய்ப்போடு
பேரப்பா பூரணத்தின் விசாலம்போலப்
பெருமையுள்ள யாகோபு கண்டோம்நாமே. ()

கண்டோமே யெண்கோணஞ் சிகாரவகாரம்
காசினியில் சிதம்பரத்தின் மூலம்போடு
விண்டோமே நகாரத்தின் பீஜமான
வேதாந்த சொருபமப்பா வாலைதேவி
நின்றோமே யொருமனதாய்க் குருவைக்கண்டேன்
நிர்மலமாஞ் சோதியிலே ஒளியுங்கண்டேன்
தொண்டர் யாகோபுக்கு யாவுந்தோற்றும்
சொற்குருவின் கமலபதந் தோற்றும்பாரே(39)

தோற்றுமப்பா மேல்வரையில் யவசிமநவென்று
　　கூட்டிடவே குருசூட்சம் பின்னுங்கேளு
சாற்றுமப்பா சவ்வும்உவ்வும் அவ்வுமென்று
　　சாடப்பா மாறிவைத்தேன் அறிவாய்ப்போடு
நாற்றிசையி லுள்ளசித்தர் மெச்சிக்கொள்ள
　　நறீயும் சிறீயுமென்று நன்றாய்ப்போடு
ஆற்றுமப்பா யெண்சாணின் வட்டந்தன்னில்
　　அகாரமுதல்உகாரவரை அடைவாய்ப்போடே()

போடப்பா உள்ளறையில் பத்துவீடு
　　புகழாகச் சிகாரமுதல் மகாரங்கொண்டு
நீடப்பா நின்றநிலை உகாரங்கொண்டு
　　நேரான வட்டத்தில் யகாரம்போடு
போடப்பா கிறீயும்அறீயும் பென்றுசாடு
　　பெருமையாம் வட்டத்தின் உயிரைக்கேளு
வாடப்பா ஓம்ஆம்ஊம மென்றுநாட்டு
　　மகத்தான தண்டகத்தின் வட்டமாச்சே. (41)

ஆச்சப்பா வட்டவரை பனிரெண்டாகும்
　　அப்பனே சொல்லுகிறேன் பின்னுங்கேளு
பேச்சப்பா சொல்லவில்லை யெந்தன் வாக்கியம்
　　போரன புஷ்பமலர் போலேயாகும்
வாச்சப்பா வயநமசி சிதம்பரத்தின்மூலம்
　　மகத்தான நாற்பதது மூக்கோணந்தான்
காச்சப்பா நாதவிந்து ரெண்டுங்கூடி
　　கருவாக சிராங்கிறீயுங் கண்டுபோடே. (42)

போடவே நாதவொலி ரேகைபோடு
　　பொருளான பேரண்ட ஸ்ரீங்காரம்போடு
நாடவே கணக்காக ஐம்பத்தொன்றை
　　நலமான சிதம்பரத்தில் நாட்டுநாட்டு
பாடவே கிரகமென்ற நவக்கிரகம்
　　பாங்காக நாற்சவுக்கம் பீஜம்போடு
ஆடவே நவக்கிரக சூலம்போடு
　　ஆச்சுதப்பா நாற்பதுமுக் கோணந்தானே (43)

தானென்ற நால்வாசல் கணபதியுங்கந்தன்
தன்மையுள்ள செயவீர வாகுதேவன்
ஆனென்ற அஷ்டகெஜம் அஷ்டதுர்க்கி
அஷ்டதிக்குப் பாலகரும் அஷ்டநாகம்
வானென்ற நவசித்தர் மூலம்போடு
மகத்தான நாதாக்கள் பீஜமாறுந்
தேனென்ற யென்குருதான் சொன்னமார்க்கம்
செயலாக யாகோபு செப்பினேனே. (44)

செப்பினேஞ் செயபேரி ஜெயமத்தாளம்
ஜெயதாரை ஜெயபம்பை ஜெயசங்குநாதம்
அப்பினே மருள்பூரி நாதவோசை
அடைவான கின்னரியும் பதினெண்வாத்யம்
தப்பினேம் நாற்பத்து முக்கோணமப்பா
தாயான வாலைப்பெண் சவுந்தரதேவி
நப்பினேன் நாதாநதம் பெற்றபெண்தான்
நாயகியாள் கொலுவிருக்கும் பீடமாச்சே. (45)

பீடமப்பா நாதாக்கள் மவுனபீடம்
பெலமான நபிமார்களறிந்தபீடம்
ஆடப்பா நாற்பத்து முக்கோணத்தை
அடைவாகப் பூசிக்க வயனங்கேளு
நாடப்பா நாற்பத்து முக்கோணத்தில்
நவிலுகிறேம் பாயசமும் வடைதேன்தேங்காய்
காடப்பா கனிவர்க்கம் இளநீர்வஸ்து
காயமுடன் நற்கிராம்பு அன்னமாமே. (46)

அன்னமுடன் அறுசுவையும் அண்டந்தானும்
அடைவான தாம்பூலம் அன்னசுத்தி
சின்னவய திவளைவிட்டாள் சிவசத்திபூசை
தெரிந்தவர்க்கே தான் தெரியும் தேவிபூசை
கன்னமுடன் முன்னமென்ற கற்பூரசோதி
கனிவுடனே சக்கரத்தைப் பூசிப்பாய் நீ
மன்னமுடன் கோங்குமல்லி பாரிசாதம்
மகத்தான புஷ்பமலர் அர்ச்சிப்பாயே. (47)

அர்ச்சித்துப் பூசிக்க அனேகஞ்சித்தி
ஆறுவரை அதிசயங்கள் பார்க்கலாகும்
பற்சிக்கச் சிதம்பரத்தில் நடனஓசை
பார்த்தாக்கால் தெரியுமே வாலைபீடம்
நற்சிக்க நாயகியாள் வாலைப்பெண்ணை
நான்பணிந்தேன் நாற்பத்து முக்கோணமேறி
தற்சொரூப மெந்தனுக்குப் பிரசன்னமானாள்
தாயான வாலையைத்தான் தெரிசித்தேனே (48)

தெரிசித்தேன் தண்டகத்தின் தெளிவுஞ்சொன்னேன்
சிறப்பாகச் சிதம்பரத்தின் மகிமைசொன்னேன்
அரிதான ஆராதாரத்தைச்சொன்னேன்
அதுவொடுங்கி யெழுந்திருக்கு மிடத்தைச்சொன்னேன்
நெரிசித்தேன் நிராதார நிலையுஞ்சொன்னேன்
நேரான அட்சரத்தின் மாறல்சொன்னேன்
பெரிதாகப் பூசிக்க விபரஞ்சொன்னேன்
போரான யாகோபு வசனங்கேளே. (49)

தண்டகக்குரு.

கேளப்பா ஆதியென்ற சாதிநாலு
கேசரியாம் பாசினிற பாசியேகேள்
ஆளப்பா வாசியென்ற வேசிஞசி
ஆகாச அண்டமப்பா ஆருங்காணார்
ஏளப்பா கருவுவெளி விந்துநாதம்
எல்லவரு மறிவார்கள் சாதிகாணார்
வேளப்பா யாகோபு அமுதவாக்கு
வேதாந்தத் தணடகத்தில் விளங்குந்தானே. ()

தானென்ற அண்டபகி ரண்டபிண்டம்
சமத்தான சாதியுட வர்னஞ்சொல்வோம்
வானென்ற சரீதையிலே வாழ்ந்தாரப்பா
மகத்தான அத்தினிசங் கினிதான்மைந்தா
தேனென்ற சித்தினியாள் போகக்காரி
சிலகால மனுபோகம் பிரியாள்பாரு
பானென்ற பத்மினியாள் காமரூபி
பரிசுடைய சுக்கிரானி லுதித்தாள்பாரே. (51)

பாரப்பா சித்திரைநாள் பருவந்தன்னில்
பஞ்சமியா முத்தரத்தில் உதித்தபிண்டம்
ஆரப்பா அமாவாசை சுக்கிரவாரம்
அன்னுளி லுதித்தபிண்டம் அஞ்சுதிங்கள்
நேரப்பா சென்றவுடன் பிண்டமாச்சு
நேரான அண்டமென்ற வெள்ளைக்கல்தான்
சாரப்பா யாகோபு அமுர்தவாக்கியம்
தாரணியி லாரறிவார் தவத்தின்வாக்கே. (52)

வாக்கான கடைப்பிள்ளை பத்மினியாஞ்சாதி
வகைவிபர மாகவல்லோ சொல்லக்கேளு
போக்கான தொன்றுமில்லை ஐந்தாந்திங்கள்
பொருளான கருவப்பா ஆருஞ்சொல்லார்
தாக்கான தலைப்பிள்ளை அண்டமப்பா
சமத்தான பிண்டமதின் கல்லைவாங்கி
நாக்கான கல்லுரலி லண்டம்போட்டு
நவிலுகிறேன் இருப்புலக்கை யதனாற்குத்தே()

குத்துகிற வகையென்ன மைந்தாகேளு
குறிப்பாக மாப்போலே குத்துவாய்நீ
பத்துகிற பாண்டமதில் மாககருவைப்போட்டுப்
பாங்காகச் சுத்தசல மதனில்வாரு
வத்துகிற மாக்கருவைக் கரைத்துக்கொண்டு
வளமாகக் கரைத்திருநீ மறுநாளப்பா
மூத்துப்போல் பத்துமுறை யிறுத்துப்பின்பு
முன்புயா கோபுசொன்னேன் ரவியில்வையே.()

வையப்பா சொல்லிவிட்டோம் பரத்திஞணை
வளமாகப் பத்துமுறை ரவியிற்காய்ந்தால்
பொய்யில்லை பழச்சாற்றிற் பொடியைப்போடு
புகழாக அடுப்பேற்றிக் கலக்கிக்காய்ச்சி
அய்யமில்லை அண்டநீர் வத்தினக்கால
அழகான கல்லுப்பின் கசிவுபோச்சு
வையகங்கள் மூழுதுமிதி லடங்கிப்போச்சு
வாழ்வுசொன்ன யாகோபு மகிமைதானே. (55)

தானான வெண்ணெய்க்கக்கி வெள்ளையாச்சு
சார்பான அண்டமெனுங் கல்லுப்பாச்சு
வேனான வெள்ளைக்கல் லுப்பிதப்பா
வேதாந்த மிம்முறையை வெளிவிடாதே
கானான கடையில் விற்குங் காரசாரம்
கருணையுள்ள பூரமொடு வீரந்தானும்
வேனான நாதவிந்து அஞ்சுங்கூட்டி
விபாமுடன் கல்வத்தி லாட்டிடாயே. (56)

ஆட்டியே கருநீலிச் சாறுவிட்டு
அப்பனே யிருசாம மாட்டுஆட்டு
பூட்டியே குலாமல்லிச் சாற்றுற்சாமம்
புகட்டுவாய் வெண்கரந்தைச் சாற்றிற்சாமம்
தாட்டிகமா யிச்சரக்கு மெழுகுபோலாம்
தன்மையுடனிம்மெழுகைக்குகைபோற்பண்ணி
ஆட்டியொன்றும் பண்ணாதே வெள்ளைக்கல்லின்
ஆகாச உப்பதனை யறையக்கேளே (57)

கேளப்பா உப்பெடுத்து குகைக்குள்வைத்துக்
கிருபையுடன் மண்சீலை யேழுஞ்செய்து
வாளப்பா யிக்குகையை ரவியில்வைக்க
மகத்தான பஞ்சகர்த்தா வாடுவார்கள்
ஆளப்பா ஒருசாமம் ரவியிற்காய்ந்து
அப்பாலே கோழியென்ற புடத்திற்போடு
கோளப்பா வாராது யாகோபுசொன்ன
குருவான சுண்ணமதின் கருவைப்பாரே. (58)

பாரப்பா சுண்ணத்தில் நவரசந்தான்விட்டுப்
பாங்கான யெச்சமதா லிழைத்துக்கொண்டு
தாரப்பா தாமிரத்தின் மீதுபூசித்
தன்மையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து
சேரப்பா நற்காட்டா மணக்குப்பட்டை
செயலான பட்டையிலே புடந்தான்போடு
நேரப்பா நீறியது குருவுமாகும்
நினைத்தசரக் கெல்லாந்தான் கொல்லுந்தானே()

கொல்லுமப்பா அறுபத்து நாலுபேரைக்
குருவருளாற் கண்டவுடன் பதனம்பண்ணு
சொல்லுமப்பா ரசவாதி யாவதற்குச்
சொற்குருவா மிந்நூலின் முறைதானப்பா
அல்லலற்றுச் சமுசார மாய்கையற்று
அநேகநாள் குருவிடத்திற் றொண்டுபண்ணி
வெல்லலற்று நிற்குணத்தின் மாய்கையற்று
வேதாந்த யாகோபு வேடம்பூணே. (60)

பூணவென்றால் சற்குருவை யடுத்தாற்சொல்வார்
பூலோக மவுனிகளும் ஞானிசொல்வார்
வேணவென்றால் வேதாந்தி யவர்கள்சொல்வார்
விவேகமுள்ள காரணத்தின் குருவுஞ்சொல்வார்
ஏணவென்றால் யிக்கருவைச் செய்துகொண்டு
எட்டுரெண்டும் பத்துவரை யேறியாடு
பாணவென்றால் பத்தரையுந் தப்பாதப்பா
பார்தனில்யா கோபுசொன்ன பாகமாச்சே (61)

ஆச்சப்பா தாமிரத்தின் குருவைச் சொன்னேன்
அடைவாக இன்னமொரு சேதிகேளு
பேச்சப்பா புவிதனிலிம் முறைதான்கொண்டு
பிரபல்ய மார்கவல்லோ பேசுவார்கள்
காச்சப்பா கருக்குருவைச் சொல்லிவிட்டோம்
கயிலாசத் தண்டகத்தின் கருவிதாச்சு
பாச்சப்பா பத்மினியாம் பிண்டத்தாலே
பத்தரையு மாத்தாச்சு பரிவாய்த்தானே. (62)

பரிவான தாமிரத்தைச் சுத்திசெய்து
பண்பாக உருக்கியே கசடுபோக்கி
அறிவான ஆனந்தக் குருவைப்போடு
ஆடுமடா கண்விட்டு அப்பாகேளு
குறியான பதம்பார்த்து யெடுத்துச்சாய்த்தால்
கோடான கோடிவரை மாத்துக்காணும்
நெறியாக யிப்பொருளைச் செய்துகொண்டு
நேரான யாகோபு அமுதமுண்ணே. (63)

உண்ணப்பா யின்னமொரு சேதிகேளு
ஓகோகோ சொல்லுகிறேம் யெந்தன் நூலில்
வண்ணமென்ற பெருநூலி லனந்தம்போக்கு
வளமான சுண்ணத்தி லனந்தம்போக்கு
முன்னமென்ற முப்பூவி லனந்தம்போக்கு
மூதண்ட சிவசத்தி யாடுங்கூத்து
அன்னமென்று சொல்வேன்யான் தண்டகத்தின்
யாகோபு நடனஒலி நாதந்தானே. (64)

தானான பிண்டமதை யார்தான் சொல்வார்
தண்ட.கத்தில் யான்வெளியாய்ச் சொல்லிவிட்
வேனான வேதாந்தப் பிண்டம்வாங்கி (டேன்
விளங்கவே முன்போலே யிடித்துக்கொண்டு
வானான பிண்டமதை மாவதாக்கி
மகத்தான பாண்டத்திற் போட்டுமைந்தா
சூனான பத்துமுறை கரைத்துவாங்கிச்
சொல்லுகிறே முப்பூவின் சுருக்கமாமே. (65)

ஆமேதான் பனிவிழுந்த சலத்தைவாங்கி
அடைவான மாவதனைக் கரைத்துக்கொண்டு
பாமேதான் பத்துமுறை யிறுத்துவாங்கு
பாங்காக ரவியில்வைக்கப் பாறையுப்பாம்
தேமேதான் பத்துமுறை ரவியிற்காய்ந்தால்
தெளிவான பண்டத்தில் சரக்கைக்கேளு
ஆமேதான் அன்னாளில் ராமதேவ
ராயிருந்து அஷ்டகர்மஞ் சொன்னேனானே. ()

நூல் விபரம்.

அஷ்டகர்ம மாடுதற்குப் பலதிரட்டு
ஐநூற்றி லன்பாகச் சொல்விட்டேன்
இஷ்டமுடன் யிருநூற்றில் யோகஞ்சொன்னேன்
ஏகாந்த வினோதவகை நூற்றிற்சொன்னேன்
சட்டமுடன் எண்பதிலே வயித்தியஞ்சொன்னேன்
சமத்தான அஷ்டாங்க மைம்பதிலேசொன்னே
திட்டமதாய் முப்பதிலே முப்புசொன்னேன் (ன்
திறமாகப் பாஷைபதி னெட்டும்பாரே. (67)

பதினெண்பேர் பாஷையது பகரொண்ணது
பாலகனே எண்ணூறில் விரித்துசொன்னேன்
மதியென்ற ஆயிரந்தான பெருநூல்பீடம்
மகத்தான குருநூல்முன்னூறும்பாரு
விதியென்ற ஆயிரத்தின் சுருக்கமாச்சு
வேதாந்த சுருக்கமப்பா யிந்நூல்தானும்
அதிவிதங்காண் பெருநூலி லகிரிபாய்ந்தேன்
அதினாலே முன்னூறு மறைத்துத்தானே. ()

தானென்ற யோகத்தி லிருந்தேனப்பா
சார்பாக மறந்துவிட்டேன் நூல்தேடாமல்
கானென்ற கருவூரா யிரம்பேர்சித்தர்
கண்டார்கள் முன்னூற்றைக் கைக்கொண்டார்
வானென்ற கருவறிந்து சித்தரோடே (கள்
மகத்தான போர்செய்து வாதாடித்தான்
தேனென்ற முன்னூறை வாங்கிக்கொண்டு
தெளிவான யோகிகட்குக் கொடுத்தேன்பாரே.

கொடுத்திட்டு முன்சொன்ன குருவுதானும்
குறையாக யிருக்குதப்பா யின்னுங்கேளு
அடுத்திட்ட கடைச்சரகின் விபரங்கேளு
அப்பனே முன்சொன்ன உப்பிலப்பா
தொடுத்திட்ட வீரமொடு பூரந்தானும்
துய்யமிகு ரசிதமென்ற வெள்ளைதானும்
அடுத்தவொரு லிங்கமொடு அஞ்சுமாச்சு
அருள்பெருகுங் கல்வமதில் அரைதாக்கே. (70)

தாக்கியே முன்சொன்ன மையிற்போட்டு
சமத்தான பழச்சாறு தன்மையாக
பாக்கிமாய்ப் பாண்டத்திற் போட்டுமைந்தா
பாலகனே மண்சீலை வேடுசெய்து
தூக்கிடுவாய் முழக்குழிதான் வெட்டியப்பா
சொரூபமாய்க் கவசம்வைத்து மேலேபாண்டம்
ஆக்கியே காட்டுமுட்டை யெடுத்துவந்து
அப்பனே குளித்தயில மிறக்குவாயே. (71)

இறக்குயிந்தக் குளித்தயில மென்னசொல்வேன்
யிருக்குமப்பா சிவந்தவர்ணம் போலேதானும்
கறக்கியிந்தத் தயிலமதில் புனுகுபூரங்
கதம்பமென்ற கஸ்தூரி சவாதுமஞ்சள்
பறக்கியிந்த புஷ்பமலர் பாரிசாதம்
பலபுஷ்ப முல்லைமல்லி மருவுதானும்
எறக்கியிந்த வாசமெல்லாம் பொடித்துத்தூளாய்
ஏகாந்தத் தயிலமதில் வாசமூட்டே. (72)

பூட்டப்பா யிதுதானும் யோகஞானி
புகழ்பெற்ற மந்திரத்தை யருமையாக
வாட்டப்பா மண்டலந்தான பத்துலெட்சம்
வகையாகச் சிதம்பரத்தின் உருவைக்சேவி
பாட்டப்பா சொல்லவில்லை உலகமாண்பார்
படிக்கவந்த கதைபோலே நினைக்கவேண் (டாம்
ஆட்டப்பா ஆடுமிந்தத் தயிலந்தன்னில்
அஷ்டமா சித்துவிளை யாடலாமே. (73)

ஆடுமப்பா வசியத்தி லனேகஞ்சித்து
ஆடலா மோகனத்தி லனேகஞ்சித்து
ஊடுமுச் சாடணத்தி லனேகஞ்சித்து
ஓகோகோ தம்பனந்தான் கோடாகோடி
சாடுமாக் கிருஷ்ணததி லனேகங்கோடி
சண்டமா ருதவெள்ள மாய்கைதோற்றும்
பேடுவாய் பேதனத்தால சகலசித்து
பேராம் வித்வேஷண மாரணந்தானுமே. (74)

ஆமப்பா அஷ்டசித்து மாடவென்றால்
அந்தந்தத் தொழில்களுட முறைதப்பாமல்
சாமப்பா பெருநூலை வைத்துக்கொண்டு
சமத்தான தண்டகத்தின் முறையேசெய்வாய்
வாமப்பா பெருநூலில் காரங்கொணடு
மகத்தான சிதமபரத்தைப் பூசைபண்ணு
நாமப்பா நாதாந்த காரங்கொண்டு
நாற்பத்து முக்கோண வாலையாமே. (75)

வாலையாஞ் சிதம்பரத்தில் வந்துபீடம்
மகத்தான சமையமப்பா ஆருதாரம்
பாலையாம் நாற்பத்து முக்கோண பீடம்
பத்மினியாள் கொலுவிருந்த நாதபீடம்
சாலையா மவளுருவு தெரியவென்றால்
சமத்தான தயிலமதில் கொஞ்சந் தொட்டு
காலையாங் கண்ணாடி பின்னேபூசிக்
கண்ணண்டை நேத்திரத்தி லொட்டிப்பாரே. ()

பாரப்பா பார்த்தாக்கா லென்னசொல்வேன்
பரமண்டலங் கடந்துபரா பாமுந்தாண்டி
ஆரப்பா அகண்டவெளிக் கப்பாலேகி
ஆதியென்ற சோதிகடந் தப்பாலோடும்
காரப்பா கனகசபை ஆறுங்கண்டு
கயிலாச மேருமுடிக் கப்பாலேகி
தாரப்பா நிராதார மாதாரத்தைத்
தான்கண்டோம் யாகோபு வொளிகண்டோமே.

கண்டோமே யித்தயிலஞ் சூட்சாசூட்சம்
கருவான அஞ்சனத்துக் காதிபீடம்
விண்டோமே பலதிரட்டி லாடும்வித்தை
விளங்கினே மித்தயிலங் கொண்டுசாடு
அண்டோமே பெருநூலா யிரத்திலாடும்
ஆதியிலே ராமனு யிருக்கும்போது
விண்டதொரு நூல்களிலே மறைத்ததெல்லாம்
வெளியாக்கிக் குருச்சுண்ண மாட்டினேமே. ()

மாட்டினேம் நாம்சொன்ன நூல்களப்பா
மைந்தனே பதினென்றும் பார்த்துத்தேறு
காட்டினேம் கருக்குருவா மிந்தநூலில்
கதிரொளியைக் கண்டவர்க்கு விண்டோம்பாரு
ஆட்டினேந் தண்டகமாம் நூற்றிப்பத்தில்
அம்மம்மா சொச்சமு நீ அறிந்துதேறி
நாட்டினேம் யாகோபு மிந்தநூலில்
நமனின்ற தேதறிவார் சிதறுவாரே. (79)

சிதறுவா ரிந்நூலைப் பதனம்பண்ணு
　　செகமென்ற மாய்கையிலே சேராதேகேள்
அதறுவாய் ராமனுட நூல்களுக்கு
　　ஆதியென்ற குருவாகு மிந்தநூல்தான்
பதறுவாய் தண்டகமா மவுனபீடம்
　　பதினென்று மிந்நூலி லடங்கிப்போச்சு
கதறுவா யிந்நூலை வெளிவிடாதே
　　காசினியில் யாகோபு சொன்னேனென்பாரே, (80)

பாரே நீ யிதைவெளியிற் பேசிடாதே
　　பண்பாகச் சொல்லுகிறேன் செய்செந்தூரம்
தூரே நீ துருசுடனே துத்தஞ்சூதம்
　　துடியான வீரமொடு பூரம்நாபி
தாரே நீ தாரமுடன் லிங்கம்வங்கம்
　　தன்மையென்ற வெள்ளையப்பா காரசாரம்
சாரே நீ பனிரெண்டுஞ் சுத்திசெய்ய
　　தனதாயாக் கோபுசொன்னார் பதனம்பண்ணே.

பதனமப்பா முன்சொன்ன முப்புச்சுண்ணம்
　　பதிவான உப்பதிலே செரங்கைகொண்டு
விதனமப்பா பீங்கானில் வலுவாய்ப்போட்டு
　　வேதாந்தத் தயிலத்தில் கொஞ்சம்விட்டு
குதனமப்பா ரெண்டையுந்தான் கூட்டிமத்தி
　　குணமான பீங்கானில் ரவியில்வைத்தால்
அதனமா யாலகால விஷங்கள்போல
　　அதில்றங்குஞ் செயநீரி னடைவுதாமே. (82)

ஆமப்பா யிச்செயநீர் தயிலங்கூட்டி
　　அறுபத்து நால்வரையும் அடிக்கலாகும்
வாமப்பா முன்சொன்ன சரக்கையெல்லாம்
　　வளமாகக் கல்வத்திற் போட்டுமைந்தா
சாமப்பா செயநீருந் தயிலம்விட்டு
　　சமத்தாக யிச்சரக்கை யாட்டிடாய்நீ
நேமப்பா மெழுகுபோல் திரளும்பாரு
　　நேராக மண்டலங்கொண் டரைத்திடாயே (83)

அரைத்திடுவாய் நாளொன்றுக் கிருநேரமப்பா
அப்பனே ஒருசாம மடைவாய்த்தாக்கு
குரைத்திடுவாய் வெள்ளிபொன் செம்புரசயம்
குணமான வங்கமுட னைந்துபேரை
மரைத்திடுவாய் செயநீரி லூறப்போடு
மகத்தான தயிலத்தில் தோய்த்துத்தோய்த்து
கரைத்திடுவாய் கார்மேக மெழுகெடுத்துக்
கருணையுடன் தேங்காய்போல் குகைதான்செய்யே

செய்யப்பா குகையைத்தா னையாஐயா
சீரான குகைதனிலே ஐந்தும்போட்டு
அய்யப்பா அம்மெழுகால் வாயைமூடி
ஆனந்த சற்குருவைக் கொஞ்சம்போடு
மெய்யப்பா காட்டுமுட்டை கூடைகொண்டு
வேதாந்த சித்திரையிற் புடத்தைப்போடு
பொய்யப்பா சொல்லவில்லை யாகோப்சொன்னார்
புடம்போடு அதினுட்செந் தூரந்தானே. (85)

தாதென்ற செந்தூரம் யெடுத்துப்பார்த்தால்
தாரணியி லதிகமப்பா மாத்தோகோடி
வானென்ற யிந்திரமாங் கோபம்போலே
மகத்தான செந்தூரம் வர்ணங்காணும்
ஏனென்ற செந்தூர மிதினாலப்பா
யிகபரமுங் கொள்ளாது யிந்தவித்தை
கானென்ற யிரும்புசெம்பில் கசடகற்றிக்
கருணையுட னதையெடுத்து உருக்கிச்சாயே ( )

சாயப்பா உருக்கையிலே பதந்தான்பார்த்து
தன்மையென்ற செந்தூரக் குருவைப்போடு
ஆயப்பா கண்விட்டு ஆடுமாடும்
அப்பனே நீயெடுத்துப் பாரு பாரு
நேயப்பா மாத்ததுதான் கோடா கோடி
நிலையான செந்தூர மகிமைமெத்த
தாயப்பா அமுதமள்ளி ஊட்டியிந்தத்
தருவான கருக்குருவைச் சாடென்றாளே. (87)

சாடென்றால் நோயாளி தனக்குக் கேளு
சார்வாகப் பணவிடைதா னெடுத்து மைந்தா
பாடென்றாற் பசுவெண்ணெய் கொண்டு வந்து
பாலகனே யனுப்பானத் தோடே யிந்நாள்
தேடென்று லிக்கருவால் சகலரோகம்
சீரான உடலைவிட்டு ஓடும்பாரு
நாடென்று யாகோப் செந் தூரங்கொண்டால்
நாடாது பேய்பூத கணங்கள்தானே. (88)

தானான குன்மமொடு சூலைதானும்
தன்மையென்ற சுரங்காசங் குஷ்டரோகம்
தானான மதுமேகங் காசரோகம்
மகத்தான பாண்டுவொடு மூலந்தானும்
வேனான வெடிசூலை கண்டமாலை
விப்புருதி முதற்கொண்டு விடுபட்டோடும்
ஆனான அரையாப்பு கிரந்தி புண்கள்
அலறிடும் யாகோபுச் செந்தூரம்பாரே. (89)

பாரப்பா செந்தூரம் பத்தியமாய்க் கொள்ளு
பத்தியத்தில் குறையிருந்தால் பழுதுகாணும்
நேரப்பா செந்தூரம் யார்தான் செய்வார்
நீடுலகில் சிவயோகி சித்தர் செய்வார்
மாரப்பா மவுனியென்ற ஞானிசெய்வார்
வையகத்தில் மதிமயங்கு மாடோசெய்யும்
ஆரப்பா அறிவார் யாகோபுசெந்தூரம்
ஆதியென்ற சிதம்பரத்தைப் பூசிப்பாயே. (90)

பூசிப்பாய் செந்தூரஞ் சிவயோகத்தில்
புனிதமுட னிருக்கையிலே சமாதுகற்பம்
ஆசிப்பாய் தேகத்தில் சூடுகொண்டால்
அப்பவல்லோ செந்தூரங் கொண்டாலப்பா
பாசிப்பாய் பரசனையுன் கண்ணிற் காணும்
பராபரமாந் தரிசனத்தைப் பார்க்கலாகும்
தாசிப்பாய் சட்டைதள்ளி மண்டலத்தில்
சமாசத்தின் வெளிதாண்டி யேறலாமே. (91)

ஏறலாந் தத்துவமாந் தொண்ணூற்றாறும்
இகபரமுங் கண்டுமைந்தா யேறினும்நாம்
சேறலா மதிதவித்தை செயசெந்தூரம்
திறமாகச் சொல்லிவிட்டோஞ் சேதிகேளு
பாரெலாந் திரிந்தலைந்து போகவேண்டாம்
பண்புடைய பெரியோரைத் தொண்டு பண்ணு
சாரலாஞ் சற்குரு யாகோபுசொன்ன
சற்குருவை அடுத்தாக்கால் வெளியாய்ப்போச்சே

போச்சென்று நினையாதே யின்னுங்கேளு
புகழாக யின்னமொரு சேதிதானும்
வாச்சுவிட்டா லுந்தனுக்கு ரசசெந்தூரம்
மைந்தனே சொல்லுகிறேன் மகத்தாம்வித்தை
பாச்சென்று நினையாதே கௌரிகாந்தம்
பரிவான மனோசிலையும் பனைப்பாஷாணம்
காச்சென்ற காரமுடன் சாரம்வீரம்
கருணையுள்ள செயரசந்தான் லிங்கங்கூட்டே.

கூட்டுவாய் சீனமுடன் வண்டுநாபி
கூறினேன் பனிரெண்டுஞ் சுத்திசெய்து
வாட்டுவாய் முன்சொன்ன செய நீர்தன்னில்
மைந்தனே ஒருசாமம் ஊறப்போட்டு
ஆட்டுவாய் அஷ்டமாத் தயிலங்கொண்டு
அப்பனே கல்வத்தி லாட்டிடாய்நீ
பாட்டென்று நினையாதே யாகோபுசென்னூர்
பலியாது யென்றவர்கள் பாழ்போவாரே. (94)

போவாரே கல்வத்தி லாட்டியேதான்
புகழாகத் தான்வழித்தால் மெழுகுபோலாம்
ஆவாரே யிம்மெழுகைக் குகைபோற்பண்ணி
ஆனதொரு தோங்காய்போற் றிரளும்போது
மாவாரே வாலைரசஞ் சுத்திசெய்து
மகத்தான யிக்குகையில் வைத்துமைந்தா
பாவாரே மூன்குருவாஞ் செயசெந்தூரம்
பாங்கான மூப்புசுண்ணம் வராகன்போடே. (95)

போடப்பா அம்மெழுகால் குகைவாய்மூடி
புகழாகக் காட்டுமுட்டை புடந்தான்போடு
ஆடப்பா கெஜபுடந்தான் போட்டாயானல்
அக்குகையில் செந்தூரம் பூக்கும்பாரு
வாடப்பா வாலைரசச் செந்தூரத்தை
வகையாகப் பதம்பார்த்து யெடுத்துக்கொண்டு
ஏடப்பா குருவாகு மிந்தவித்தை
ஏமமென்ற பரியேம மிதுக்கொவ்வாதே. (96)

ஒவ்வாத செந்தூரம் பணவிடைதான் கொண்டால்
ஓகோகோ கோடியுகங் காயம்நிற்கும்
சவ்வாது வாசம்போல் மண்டலத்தில்
சடத்திலுள்ள பிணிகளெல்லாஞ் சாராதோடும்
மவ்வாது வாலைரசச் செந்தூரத்தை
மகத்தான நாதாக்கள் பூசிப்பார்கள்
தவ்வாத செந்தூரம் பதனம்பண்ணு
சாயுச்ய பதவியிலே யிருந்துதேறே (97)

தேறப்பா தண்டகத்தி லாடுங்கூத்து
தெளிவாக நாம்கண்டு உமக்குச்சொன்னேன்
ஆரப்பா சொல்வார்கள் வாலைபீடம்
அறிந்தமட்டுஞ் சொன்னேனப்பாசொச்சங்கேளு
தேரப்பா வாமப்பெண் வாலைதேவி
தெரிந்தேனே நாற்பத்து முக்கோணபூசை
சாரப்பா சிதம்பரமு மவுனஸ்தம்பம்
தாயான பராபரியைப் பணிந்தோம்நாமே (98)

ஆமப்பா நபிமார்கள் கிருபையாலே
ஆதிபரா பரத்துநிலை அறிவார்கண்டோம்
நாமப்பா சொல்லிவிட்டோம் தண்டகத்தில்
நமனில்லை கோடிவரை நன்ருய்ச்சொன்னேம்
சாமப்பா சாவதுவும் பிரளிபோச்சு
சச்சுதா னந்தவெளி சார்புகண்டோம்
வாமப்பா அண்டரண்ட மருளுங்கண்டோம்
மகத்தானயாகோபு பொருள்விண்டோமே. (99)

பொருளான பூரணியாம் வாலைதேவி
பூமாதைக் கண்டமப்பா தெண்டஞ்செய்தோம்
அருளான ஆதியடா சோதிசோதி
அம்பிகையாள் கொலுவிருக்கும் பீடங் கண்
தருளான தாயாரைக் கண்டோமப்பா (டோம்
தற்பரத்தி னொளிகாட்டிச் சாதித்தாள்பார்
பருளான பதினறு வயதுப்பெண்தான்
பாலித்தா ளஷ்டசித்துஞ் சாதித்தாளே (100)

சாதித்தாள் ஞானத்தின் மகிமை சொன்னாள்
சமத்தான சஞ்சார சமாதி சொன்னாள்
போதித்தாள் பூரணத்தின் குறியுஞ் சொன்னாள்
புகழான அஷ்டசித்தி கருவுஞ்சொன்னாள்
சேதித்தாள் செயமான செந்தூரஞ் சொன்னாள்
செகமயக்கும் அஞ்சணமும் யோகஞ்சொன்ன
வாதித்தாள் வாலைரசச் செந்தூரகற்பம்
மகத்தான யாகோபு மகிமைதானே (101)

மகிமையென்ற நாற்பத்து முக்கோணஞ்சொன்னாள்
மகத்தான சிதம்பரமும் யோகதீட்சை
அகிமையென்ற ஐம்பத்தோ ரட்சரத்தில்
ஆதார நிராதார நிலையுஞ் சொன்னாள்
பகிமையென்ற பராபரையாள் சொன்னபாகம்
பாடினேந் தண்டகத்தின் பண்போகேளீர்
தகிமையென்ற தாரணியில் யாகோபென்பேர்
தற்பரத்தி னொளிகண்டோந் தாய்சொன்னாளே ( )

தாயேபெண் மாமயிலே தற்பரத்தின்
தயாபரத்தின் தன்னொளியே வாவாதேவி
ஆயேயென் னம்பிகையே அமுதவாழ்வே
அண்டபிண் டத்தொளிவே அம்மாஅம்மா
நீயேநா னென்றவர்க்குக் கொஞ்சும் மாதே
நிராதார தற்பொருளே அருளே யென்றும்
வாயேநான் பொற்கொடியே ஞானரூபி
மகத்தான பூமாதே யென்று காணே. (103)

காணவே தண்டகத்தி லாடுந்தேவி
கற்பூர தீபவொளி கௌரிமாரி
நாணவே சதுரகிரி யுறைந்தாளாத்தாள்
நவராத்திரிக் கொலுவதனி லிருக்கும்தேவி
தேனே நீதெவிட்டாத அமுத வாழ்வே
திரிபுரமாஞ் சோதிமணி விளக்கேயென்று
நானே நீ நாதாந்த சொரூப வாழ்வே
நாயகியே வாலைப்பெண் தாயே யென்னே.(104)

என்னவே பதினெண்பேர் போற்றிச்செய்யும்
ஏந்திழையே பரிசுடைய காமரூபி
வன்னவே வாலைசுந் தரமேதேவி
மகத்தான சித்தருக்கு வரங்களீயும்
அன்னமே ஆதிசத்தி அம்பிகா நீ
அம்மம்மா தண்டகத்தில் கொலுவிருக்கும்
சொன்னமே புவிவாழும் லோகமாதா
சொற்பெரிய பராபரையைத் தெரிசித்தோமே()

தெரிசித்தோம் தண்டகமாம் நூற்றுப்பத்தில்
திறமாகப் பாடிவிட்டோம் தெளிவுள்ளோர்கள்
அரிசித்தோ மிந்நூல்தான் சூட்சாசூட்சம்
ஆருக்கும் அாணை கொடுக்கவேண்டாம்
பரிசித்தோம் பனிரெண்டு வருஷமப்பா
பரமகுரு தண்டகத்தில் பாடுபட்டோம்
வருசித்தோம் சற்குருவை அடுத்துக்காத்தோம்
மகத்தான யாகோபு அருளிதாமே. (106)

அருளுவா ராதியென்ற அண்டபிண்டம்
அகண்டவெளி சராசரத்தி னருளேவாழி
பருளுவார் பராபரத்தின் பொருளேவாழி
பதியான சிதம்பரத்தின் பாதம்வாழி
நருளுவார் நாற்பத்து முக்கோணம்வாழி
நாதாந்த நாயகியே வாழிவாழி
சரிதையென்ற பத்மினியாம் நாலாஞ்சாதி
சதுர்வேத யாகோபு சொன்னவாழி. (107)

வேதமென்ற நபிமார்க்கு வாழிவாழி
விவேகமுள்ள நாதாக்கள் பாதம்வாழி
போதமென்ற பொதிகைவளர் தெட்சணுயன்
புனிதமுள்ள அகத்தீசர் பாதம்வாழி
நீதமென்ற நபிமார்கள் குருவாமெங்கள்
நேர்மைபெற்ற சற்குருவின் பாதம்வாழி
வாதெனவே வந்தவர்க்கு யாகோபுசொன்ன
மகத்தான தண்டகத்தின் மகிமைதானே. (108)

தானென்ற தண்டகம் யாகோபு சொன்ன
தற்சொரூப நாதவிந்து பீடமப்பா
வேனென்ற சாவேது நாதபீடம்
வேதாந்தத் தண்டகமா முழுதும்பார்த்து
நானென்ற நாதாக்கள் சத்தகோடி
நாலுதிசை சித்தர்களும் நடனஞ்செய்து
பானென்ற வாத்தியமாம் பதினெண்வாத்தியம்
பரிபாஷை டமபேரி பரிசித்தாரே. (109)

பரிசித்தார் புஷ்பமலர் மாரிபோலே
பகல்போலே தண்டகத்தில் சோதிகண்டார்
வரிசித்தார் அமுதநதி கங்கைதீர்த்தம்
மகத்தான அமுதமதை ஆதியென்றூர்
தரிசித்தார் தண்டகமாய் நூறுஞ்சொச்சம்
சார்பாகச் சித்தருக்காய் வெளியாய்ச்சொன்னூர்
தெரிசித்தார் நாதாக்கள் தெளிந்துதேறி
தெண்டகமாம் யாகோபு சித்துமுற்றே. (110)

யாகோபு தண்டகம்—110. முற்றிற்று.

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியசூஸ்திரம்-55

காப்பு.

பூரணம தாய்நிறைந்த பரத்தைத்தானும்
புகழாக யானுமே போற்றிசெய்து
தாரணமாய் நபிமார்கள் பாதம்போற்றி
தற்சொருப மாய்விளங்கும் வெளியைப்போற்றி
காரணமாய் வைத்தியமுன் னூருஞ்சொல்லி
கருத்தாக ஐம்பத்தைந் ததனைச்சொல்ல
ஆரணமா யெந்தனுக்கு உபதேசித்த
அன்பார்ந்த ரஹுமானின் பாதங்காப்பே.

சய காசத்துக்குச் செந்தூரம்.

காப்பான லிங்கமுட னரிதாரந்தான்
கணக்காக வீரமுடன் பூரந்தானும்
தாப்பான மனோசிலையும் ஊசிக்காந்தம்
சரியாக வகைக்குக்கால் பலமேவாங்கி
மாப்பாக யிவையாவுஞ் சுத்திசெய்து
மட்டமதாய்ப் புதுச்சட்டி தன்னிற்போட்டு
கோப்பாக முசுமுசுக்கைச் சாறுவிட்டுக்
குறிப்பாக ரவிதனிலே காயவைத்தே. (1)

காயவைத்துப் பின்பெடுத்துக் கொண்டுதானும்
கணக்காக கல்வத்தி லிட்டுநன்றாய்
நேயமுடன் பழச்சாறு தன்னாலாட்டி
நிச்சயமா யிரவிதனிற் காயவைத்து
தேயமுள்ள மெழுகுபத மானபின்பு
சிறப்பான வட்டோடு தன்னில்வைத்து
ஆயமாய் மேலோடு கவிழ்த்துமூட
அருமையா யாகோபு சொன்னவாறே. (2)

சொன்னதொரு ஓட்டுக்குக் கவசந்தானும்
கண்ணும்புச் சேலைசுற்றிக் கவசஞ்செய்து
நன்னயமா யைந்தெருவிற் புடத்தைப்போட்டு
நாடியே ஆறினபின் னெடுத்துப்பாரு
மின்னல்போல் செந்தூர மிருக்கும்நல்ல
மேலான சிமிழ்தனிலே வைத்துக்கொண்டு
கன்னல்போற் பணவிடைதா னிஞ்சிச்சாற்றில்
கருத்தாகப் புசித்துவர வியாதிபோமே. (3)

போமென்ற வியாதிகளைச் சொல்லக்கேளு
புகழான சயமீளை யிளைப்புக்காசம்
நாமென்ற மகோதரங்கள் வெப்புப்பார்வை
நாடிவந்த மேகமுடன் பரங்கிக்குஷ்டம்
ஆமென்ற சில்விஷத்தால் வெடித்தசூலை
அன்பாக நாளாறிற் பறந்துபோகும்
ஓமென்று உலகத்தோர்க் கிந்நூல்தானும்
உறுதியா யாகோபு சொன்னேன்பாரே. (4)

பாரேநீ பத்தியமோ யிச்சாபத்தியம்
பரிவான கரப்பானின் பண்டந்தள்ள
நேரேதா னெந்தனுக்கு நபிமார்சொன்னார்
நீணிலத்தோர் பிழைப்பதற்கு வெளியாய்ச்சொன்னேன்
சீரேதான் பசித்துவந்தோர்க் கன்னதானம்
சிறப்பாகச் செய்துவர வந்தரோகம்
தேரேதான் தூளாகப் பறந்துபோகும்
தீரமுடன் யாகோபு செயமீதாமே. (5)

நீரிழிவுக்குச் சேந்தூரம்.

செயமான தாளகச்செந் தூரங்கேளு
திறமான தாளகமும் பலந்தானென்று
நயமான காரமது பலந்தானென்று
நல்லதொரு வெடியுப்புத் துருசுதுத்தம்
வயமான வீரமுடன் சாம்பிராணி
வகைக்குமுன்வீ தம்பலந்தா னென்றுவாங்கி
பயமாக முன்போலே புடந்தான் போடப்
பகாறிய செந்தூர மாகும்பாரே. (6)

ஆகுமொரு செந்தூரஞ் சிமிளில்வைத்து
அன்பாகப் பணவிடைதான் தேனிற்கொள்ள
போகுகின்ற வியாதிகளைச் சொல்லக்கேளு
புகழான நடுக்குவலி கிராணிமூலம்
ஏகுமே நீரிழிவு பிரமே கந்தான்
எரிகுன்மங் காமாலை குஷ்ட ரோகம்
வாகுபெறுங் கருஞ்சோகை மஞ்சள் சோகை
மந்தார காசமுதற் றீருந்தானே. (7)

தீருமே நாளாறில் வியாதி போகும்
திறமான பத்தியத்தைச் சொல்லக் கேளு
நேருகின்ற புளியுப்பை மூன்று வேளை
நிட்சயமாய்த் தள்ளியே யுண்டு பின்னும்
தேருமே யிச்சாபத் தியங்களாக
சிறப்பாகக் கரப்பானுந் தள்ளவேண்டும்
பாருமே கடுகுநல் லெண்ணெய் தள்ளிப்
பத்தியமா யிருந்திடயாக் கோப் சொன்னாரே ()

மூலமுளைக்குச் குழம்பு.

ஆரேதான் குழப்பொன்று சொல்லக்கேளு
அருமையாந் துருசுடனே கற்பூரந்தான்
தேரேதான் கஸ்தூரி மஞ்சள் ஓமம்
திறமான பெருங்காயம் கடுகிந் துப்பு
சீரேதான் வகைக்குக்காற் பலமே வாங்கி
செயலான எரண்டத் தெண்ணெய்விட்டு
பாரேதான் அரைத்திடவே குழம்பு மாகும்
பதனமாய் வழித்துநீ சிமிளிற்போடே (9)

போட்டபின்பு அனுப்பானஞ் சொல்லக்கேளு
புகழான கருந்தவிடு தன்னிலேதான்
நாட்டமுடன் குண்டுமணி யளவ தாக
நன்றாகத் தானுருட்டி வைத்துக் கொண்டு
தேட்டமுட னுண்டுவரக் கிருமி வீழும்
திறமான புகைச்சலது பாசி பத்தும்
வாட்டமுட னேடிவிடு மஷ்ட குன்மம்
மலங்கழியும் மூலமுளை யோடுந் தானே. (10)

தானென்ற குழம்பாலே தேகஞ் சுத்தி
தானாகும் வியாதியுட வேகம்போகும்
நானென்ற வெப்பமது முன்னேபோகும்
நலமான அன்னமது பாலிலேதான்
தேனென்ற கரியுப்பை யூறப்போட்டுத்
திகழாக ஏழுநாட் கொண்டாயானால்
வானென்று சொன்னதொரு வியாதியெல்லாம்
வாய்பேசா தோடுமின்னங் களிம்பு கேளே. ()

கண்டமாலைக்குக் களிம்பு.

இன்னவே திருநீல மயானப் பூடு
இனிமையாய் மெத்தவுண்டு பெண்பூ டப்பா
நன்னவே கொண்டுவந்து கல்வத்திட்டு
நல்லதொரு கற்பூரம் அரிதாரந்தான்
பன்னவே வகைக்கிரண்டு களஞ்சு வாங்கு
பண்பாகக் கல்வத்தி லிட்டு நீயும்
சொன்னபடி ஏரண்டத் தெண்ணெய் வார்த்துச்
சுகமாக அரைத்திடவே களிம்புமாச்சே. (12)

ஆச்சென்ற களிம்பதனை வழித்து நீயும்
அடைவாக யிலவம்பஞ்சு தன்னிலூட்டி
வீச்சென்ற நாள்மூன்று போட்டா யானால்
விபரமடா பொன்னியொடு கண்டமாலை
மூச்சென்ற பரங்கியதும் அல்சூற்குத்து
முதலான தடிச்சிலந்தி துடைவாளைப்புண்
ஏச்சென்ற பருமுதலாய் வந்த புண்கள்
இல்லாமற் சருகுபோற் காயும் பாரே. (13)

கபால வாய்வுக்குச் சூரணம்.

பாரேநீ சூரணந்தான் ஒன்று கேளு
பதமான சாம்பிராணி கடுக்காய் கோஷ்டம்
காரேதான் வெந்தயமுந் திரிகடுகும்
காயமுடன் வகைக்குகால் பலந்தான் வாங்கி
ஆரேதான் புதுச்சட்டிக் குள்ளே போட்டு
அதுமுங்கப் பழச்சாறு விட்டு நன்றாய்
தேரேதான் கிண்டிவிட்டு ரவியில்வைக்க
நிச்சயமா யாகோபு சொன்ன வாறே. (14)

சொன்னபடி காய்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
சுகமாக உரலிலிட்டு யிடித்துநன்றாய்
நன்னயமாய் வடிகட்டி கலசத்திட்டு
நலமான வெள்ளைச்சர்க் கரையுஞ்சேர்த்து
தன்மையாய்த் தான்பிசைந்து நெல்லிக்காய்போல்
தானுருட்டிச் சாடியிலே வைத்துக்கொண்டு
கன்னல்போல் மண்டலந்தான் கொண்டாயானால்
கருத்தாகத் தீருகின்ற வியாதிபாரே. (15)

பாரேதான் காலுளைச்சல் முடக்கல்வாதம்
பளிச்சென்ற பெரிகுன்மம் கபாலவாய்வு
நேரேதான் விழியதிலே படரும்நீரும்
நிட்சயமாய் உஷ்ணத்தா லெடுத்தகாந்தல்
காரேதான் பச்சையிள வாதஞ்சூடு
காதிரைச்சல் குத்துமுதற் கபாலவாய்வு
சீரேதான் அனற்சூடு தாகரோகந்
தீர்ந்துவிடும் யாகோபு சொன்னவாறே. (16)

உஷ்ண வாய்வுக்குச் சூரணம்.

தீர்ந்துவிடு மின்னமொரு சூரணங்கேள்
செருப்படையின் கொடுவேலி மூலத்தோடு
ஆர்ந்ததொரு லிங்கமுடன் காந்தந்தானும்
அடைவாகச் சவ்வீரம் வகைக்குக் கால்தான்
நேர்ந்ததொரு புதுச்சட்டிக் குள்ளேபோட்டு
நேர்மையுள்ள கொடுப்பைச்சார் முங்கவிட்டு
சார்ந்ததொரு கடுவெயிலிற் காயவைத்து
தானெடுத்து இடித்துநன்றாய்ச் சூரணித்தே ( )

சூரணித்துத் தேனதிலே நெல்லிக்காய்போல்
சுகமாகத் தானுருட்டி யிராறுவேளை
சாரமுட னிருவேளை யுண்டாயானால்
தான்தீரும் வியாதிகளைச் சாற்றக்கேளு
பாரமுள்ள உஷ்ணத்தால் வந்தவாய்வு
பத்தியே பித்தத்தால் வந்தவாய்வு
தீரமாய் முதுகதிலே யேறும்வாய்வு
செயலான சுரங்கள் முதல் தீருந்தானே. (18)

தானென்ற வாய்வுமுத லானதெல்லாம்
தானோடும் சடத்துக்கு உறுதிமெத்த
வேனென்ற தேகமது பெலத்துப்போகும்
வேணுமென்ற ஆகார மெத்தவாங்கும்
நானென்ற பெண்ணாசை தள்ளவேண்டும்
நலமான நல்லெண்ணெய் கடுகுமாகா
கோனென்ற யாகோபு சொன்ன நீதி
துவலையத்தோர்க் காகவே கூறினேனே. (19)

கர்ப்பச் சூரணம்.

கூறினே னின்னமொரு சூரணந்தான்
குருவாகும் வில்வமர விலையேமூலம்
தேறியே கொண்டுவந்து உலர்ந்த பின்பு
சீரகமும் வெந்தையமும் கிராம்புயேலம்
மீறியே மதுரம்வகைப் பலமேகாலாம்
விளங்கவே உரலிலிட்டுச் சூரணித்து
கோரியதோர் தேனதிலே நெல்லிக்காய்போல்
குறிப்பாகத் தானுருட்டி உண்டாற்கேளே. ()

உண்டாக்கால் கர்ப்பத்துக்கு குறுதியாகும்
உண்மையுடன் மண்டலந்தான் புசித்துவந்தால்
பண்டான கர்ப்பப்பூச் சிகளும்போகும்
பாரமுள்ள கர்ப்பவாய் வுகளும்போகும்
துண்டான யிருபத்தொரு மேகம்போகும்
சூலைமுதல் வியாதிகளுந் துலைந்தேபோகும்
கண்டாக்கா லிம்மருந்தை வெளிவி டார்கள்
கருவான கர்ப்பமுண்டாங் கண்டுபாரே. (21)

மருந்தீடு முறியச் சூரணம்.

கற்பமுண்டாம் பின்னுமிந்தச் சூரணத்தைக்
காசினியில் மருந்திடு கொண்டபேர்க்கு
அற்பமென்று நினையாமற் சூரணத்தை
அன்புடனே ஒருவாரம் உண்பாராகில்
உற்பனமாய் வயிற்றிருந்த மருந்தீடெல்லாம்
ஓகோகோ மலமாகச் செமித்துவீழும்
தற்பரனார் செயலாலே உலகத்தோர்கள்
தான்பிழைக்க வெளியிட்டுச் சொன்னேன்பாரே. (22)

சன்னிக்குக் குழம்பு.

பாரே நீ குழம்பொன்று சொல்லக்கேளு
பரிவான காந்தமுடன் லிங்கந்தானும்
நேரே நீ துருசுடனே காரசாரம்
நேர்மையுடன் வகைக்கிரண்டு களஞ்சுவாங்கி
தேரே நீ கல்வத்தி லிட்டுநீயும்
திறமான பழச்சாறு விட்டுஆட்டி
பேரே நீ குழம்பதனை வழித்தெடுத்து
பெருமையுள்ள சிமிளதனில் வழித்து வைத்தே (23)

வைத்துவிட்டு யிஞ்சியுட சாருதன்னில்
வழியோடே சுண்டைக்கா யளவுபோட்டு
மெத்தவே தான்குழப்பிக் கரைத்துக்கொண்டு
வெசவாக உள்ளுக்குக் கொடுத்தாயானால்
மத்தமொரு பதின்மூன்று சன்னியுந்தான்
மயக்கமொடு அசதிகளும் விலகிப்போகும்
சித்தமொடு யாகோபு சொன்னேன்பாரு
சிறப்பாக நில்லென்று செய்துபாரே. (24)

நில்லென்று ஐயத்தாற் புலப்பங் கண்டால்
நேர்மையென்ற சன்னியினால் வெறியுண்டாகும்
வல்லதொரு மயக்கமவரும விலகுதற்கு
வகைகேளு அமுதப்பால் கொஞ்சம்வாங்கி
நல்லதொரு மெழுகதனிற் கடுகெடுத்து
நலமாகத் தான்குழப்பிக் கண்ணிற்போட
மெல்லவே சன்னியுந்தான் விலகியோடும்
விளம்பினேன் யாகோபு நீதிதானே. (25)

கர்ப்பச் சூரணம்.

நீதியுள்ள சூரணந்தான் வெகுபோக்சாகும்
நிகழ்த்துகிறேன் நவச்சாரஞ் சீனக்காரம்
ஆதியென்ற காந்தமுடன் சூடைநீறும்
அரிதான கடுக்காயுங் காயம் மஞ்சள்
சோதியென்ற கறபூரம் வால்மிளகும்
சுகமான கிரும்புடனே சாதிப்பத்திரி
கோதில்லா திவைபாவுங் காற்பலமே வாங்கி
குறிப்பாகப் புதுச்சட்டி தன்னிற் போடே. (26)

போடுவது வேலியுட பருத்திச்சாறு
புகழாகச் சட்டியிலே மூங்கவிட்டு
கூடியே சார்வற்ற வெயிலில்வைத்து
குறிப்பாகக் காய்ந்தபின்பு உரலிலிட்டு
தேடியே யிடித்துநன்ருய்ச் சூரணித்துச்
சிறப்பான புதுக்கலசந் தன்னிற்சேர்த்து
நாடியே வேப்பமரப் பட்டைதன்னை
நலமாகப் பலம்பத்துக் கியாழம்போடே. (27)

போட்டதொரு கியாழத்திற் படியரைக்கால்
புகழான சூரணமே கடிகைபோட்டு
தாட்டமுள்ள பெண்ணவள்தான் விலக்குநாளில்
நன்மைபெற இரண்டுநாள் தான்கொடுத்தால்
தேட்டமுள்ள சூதகந்தான் ரெம்பவாகும்
திறமான கர்ப்பத்தின் கிருமிபோகும்
வாட்டமிலா கர்ப்பங்கள் மிகத்தரிக்கும்
மகத்தான யாகோபு வகைதான்பாரே. (28)

வகையென்ன ஐந்தாநாள் குளித்துமுழ்கி
மகிழ்வாகக் கணவனுடன் சேர்ந்திருந்தால்
தகையிலாக் கருக்குழியிற் கர்ப்பமாகித்
தானதுவே மாதமதாய்த் தானிருந்து
திகையிலா தேபத்து மாதம்சென்று
சிறப்பான குழந்தையது பிறக்கும்பாரு
நகையிலா யாகோபு உலகத்தோர்க்கு
நாட்டிவைத்தேன் வழிகண்டு பிழைக்கத்தானே. (29)

மருந்து முறிவுக்குக் கியாளம்

பிழைப்பதற்குக் கியாளமென்று சொல்லுகின்றேன்
பெரியதொரு பற்பஞ்செந் தூரந்தன்னை
தழைப்பதற்கு வியாதியறப் பிரியமாகச்
சாப்பிட்டு வியாதியது தீருமுன்னே
கழைப்புடனே வேறுமொரு மருந்துதின்ருல்
காசினியி லவர்களுக்கு வெப்புத்தாக்கி
இழைப்புடனே திரிவார்க ளவர்களுக்கு
இனிமையுடன் நற்கியா ளத்தைக்கேளே. ()

கேளே நீ வெள்ளருகு சமூலந்தானுங்
கிருபையுள்ள மாதுளத்துப் பழத்தின்தோடும்
நாளேதான் மிளகுடனே கூகைநீரும்
நலமாக வகைக்கிரண்டு களஞ்சிவாங்கி
வேளேதான் புதுச்சட்டி தன்னிற்போட்டு
மிகவேதான் படியொன்று தண்ணீர்விட்டு
கோளேதான் வாராம லடுப்பிலேற்றி
குறுகியே யெட்டொன்றாய் வருகும்போதே ()

வருகின்ற சமையம்பார்த் திறக்கிக்கொண்டு
வன்மையாம் பீங்கானிற் றானிருத்து
தருகின்ற சர்க்கரையும் கொஞ்சம்போட்டு
தப்பாம லதைக்கலக்கிக் கொண்டாரானால்
பெருகின்ற மருந்தீடு வேகமெல்லாம்
பேசாம லோடிவிடும் பிழைக்கச்சொன்னேன்
உருகின்ற மனிதனுமே பெலவானுவான்
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார்தானே. ()

ஈளை காசத்திற்குத் தைலம்.

உரைத்ததொரு தயிலத்தின் விபரங்கேளு
உண்மையாம் வில்வமர மூலமொன்று
நிரைத்ததொரு முல்லையுட மூலமொன்று
நேரான மஞ்சனத்தி மூலமொன்று
திரைத்ததொரு கொடிவேலி மூலமொன்று
திகழ்கண்டங் கத்திரியின் மூலமொன்று
விரைத்ததொரு வேர்மூலங் கொண்டுவந்து
விகசிதமாய்க் காய்ந்தபின்புகண் டமாக்கே. ()

கண்டமதாய்த் தானாக்கிச் சரிசமனாய்க்
காசினியோர் பிழைப்பதற்குப்பானையிட்டுக்
கொண்டதொரு வேருமுங்க நீரைவிட்டு
குறிப்பாக அடுப்பேற்றி யெரித்திருத்து
குண்டமதி லிரண்டுபடி யெடுத்துக்கொண்டு
கூறாக முத்தெண்ணெய் படிதான்விட்டு
பண்டமதாய் யெள்ளெண்ணெய் படிதான்விட்டுப்
பாங்காக நாலுபடி சேர்த்துக் காச்சே. (34)

காச்சல்லே மிளகு மஞ்சள் சாம்பிராணி
கலங்கமில்லாப் பூரமுடன் கோஷ்டந்தானும்
ஏச்சலிலா காற்பலம தாகவாங்கி
இயல்பாக நீபொடித்துப் பாண்டத்திட்டு
மாச்சலிலா தேகாய்ச்சி வருகும்போது
வகையான மெழுகுபதம வருதல்கண்டு
ஆச்சலிலா தேயிறக்கி வைத்துக்கொண்டு
அடைவாகக்குப்பியிலே யிருத்துக்கொள்ளே ()

இருத்துமே தான்தேய்த்து முழுகுதற்கு
இயல்பாக சீயக்கா வெந்நீர்வார்த்து
திருத்தமுடன் முழுகிவர யீளைகாசம்
சென்றுவிடுஞ் சயரோகந் தாகரோகம்
அருத்தமுள்ள வெடிசூலே வங்குசோகை
அடைவான பிணிசங்க ளெல்லாம்போகும்
வருத்தமுள இச்சாபத் தியத்தைத்தள்ளி
மகிழ்வாக முழுகயாக்கோபுசொன்னரே. (36)

வெள்ளெழுத்துத் தயிலம்.

ஆரேதா னின்னமொரு தயிலங்கேளு
ஆடுதின்னுப் பாளைகவு தும்பைமூலம்
தேரேதான் நிழலுணர்ததிக் காய்ந்தபின்பு
நோகச் சமனிடையா யெடுத்துக்கொண்டு
தேரேதான் முன்போலப் பாண்டத்திட்டு
சிறப்பாக மருந்துமுங்கத் தண்ணீர்விட்டு
சீரேதா னடுப்பேற்றி வற்றக்காய்ச்சி
செயலாக இரண்டுபடி இருத்துக்கொண்டே ()

கொண்டேநல் லெண்ணெய்யொரு படிதான்விட்டு
கூடவே மிளகுமஞ்சள் சாம்பிராணி
பண்டேதான் பூரமுடன் கோஷ்டந்தானும்
பரிவாகக் காற்பலம தாகவாங்கி
கண்டேதான் நீபொடித்து அதனுட்போட்டுக்
கணக்காக அடுப்பேற்றித் தீயெரித்து
அண்டையிலே தானிருந்து மெழுகுபதங்கண்டு
அடைவாக நீயிறக்கி யிருத்து வைத்தே. (38)

வைத்ததொரு தயிலத்தைச் சிரசில்தேய்த்து
மகிழ்வாக முன்போலே முழுகிக்கொள்ள
மெத்தவே கண்ணில்வந்த மாசிதீரும்
வெள்ளெழுத்துக் கண்பகைல் விலகியோடும்
பித்தமொடு சூன்மங்கள் மகோதரங்கள்
பேசாமலோடிவிடு மிடமில்லாமல்
பத்தமுள்ள யாகோபு சொன்ன நீதி
பரிவாக நீயறிந்து பார்த்துக்கொள்ளே. (39)

பச்சை வாதத்திற்குப் பற்பம்.

பார்த்துமே அரிதாரம் பலமேவாங்கி
பரிவான பழச்சாறு விட்டுஆட்டி
நேர்த்தியா யுருட்டியதைக் காயவைத்து
நேர்மையுடன் தில்லைப்பால் தனைக்கொணர்ந்து
சீர்த்தியுடன் பீங்கானில் விட்டுப்பின்பு
சிறப்பாக அரிதாரக் கட்டிதன்னை
ஆர்த்தியுடன் தில்லைப்பால் நடுவேவைத்து
அடைவாக வெயிலில்வைக்கப் பற்பமாமே. ()

பற்பத்தைச் சிமிளிலே வைத்துக்கொண்டு
பணவிடைதான் தேனதிலே கொண்டாரானால்
அற்பமென்று நினையாதே பரங்கிப்புண்கள்
அரிதான சூலையொடு பச்சவாதம்
சொற்பமாம் நடுக்குவலி தடிப்பும்வெள்ளை
சூலையொடு தழுவணையு மகன்றுபோகும்
கற்பமது போலாகும் இச்சாபத்தியம்
கார்த்திடவே யாகோபு காட்டினாரே. (41)

இரத்தப் பிரமேகத்திற்குப் பற்பம்

காட்டினேன் ரத்தசலப் பிரமேகந்தான்
கணக்காகத் தீர்ப்பதற்கு முறையைக்கேளு
நாட்டினிலே சுடலைதனில் வெந்தஅஸ்தி
நாளடைவிற் றனெடுத்துக் கொண்டுவந்து
தாட்டிகமாய்ப் பசுவின்பால் விட்டரைத்துச்
சரியான வில்லைதட்டிக் காயவைத்து
மேட்டிமைக ளில்லாமல் முழப்புடத்தில்
மெய்யாக வைத்தெடுக்கப் பற்பமாச்சே. (42)

ஆச்சேதான் ரத்தப்பிர மேகந்தானும்
அன்பாகக் கொண்டவர்க்கு ஆறுவேளை
கூச்சலிலா துட்டுக்கா சிடைதான்பாலில்
கொடுத்தாக்கா லிரத்தப்பிர மேகமோடும்
மாச்சலிலா திம்மருந்து வெளிவிடாதே
வகையாக ஒருவார மிச்சாபத்தியம்
ஏச்சலிலா திருந்திடவே யாகோபுசொன்னார்
இயல்பாக தேகவச்சிர காயமாமே. (43)

கற்ப்பத்திற்கு வங்கபற்பம்.

தேகமது நிலைப்பதற்கு வங்கப்பற்பம்
திறமான வெள்வங்கம் ஒருபலந்தான்
பாகமாம் போண்டம் ஓடு தன்னில்
பதமாங்காட் டாமணக்குப் பருப்புஞ்சேர்த்து
ஏகமாம் வெள்வங்கம் தன்னிற்போட்டு
இயல்பாகக் கவசமது செய்துகொண்டு
யோகமாய் முழப்புடத்தில் வைத்தெடுக்க
உற்பனமாம் வெள்வங்க பற்பந்தானே. (44]

வங்கபற்பம் பணவிடைதான் பசுவின்வெண்ணெய்
வாங்கியே பாக்களவில் பற்பம்வைத்து
கங்கணமாய்த் தான்பொதிந்து சாப்பிட்டாக்கால்
கர்ப்பத்தில் வந்தபெரும் பாடுதீரும்
தங்கம்போற் கேசரிப்பால் தன்னிற்கொள்ள
சகலபயித் தியக்கிருக்குந் தீருந்தீரும்
திங்கள்போல் கர்ப்பமுள்ள மாதருக்கு
தேடிவந்த ரத்தப்பிர மேகம்போமே. (45)

போமேதான் ஆவின்பால் தன்னிற்பற்பம்
போட்டுமே தான்குழப்பி மூன்றுவேளை
தாமேதான் சாப்பிடவே ரோகம்போகும்
சரியான பத்தியத்தைச் சொல்லக்கேளு
நாமேதான் கறப்பான்பண் டங்கள்தள்ளி
நயமான இச்சாபத் தியமிருந்தால்
ஆமேதான் தேகமது கற்றாணாகும்
அன்புடனே மறவாமற் செய்துபாரே. (46)

முகவாதத்திற்கு லேகியம்

மறவாமலே ரிதழ்தா மரைசமூலம்
வாங்கிவந்து நிழலுலர்த்திச் சூரணித்து
திறமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சீரகமும் ஆறுபலந் தானிருத்து
தறயான சந்தனமும் பலந்தான்மூன்று
தப்பாமற் செஞ்சந்த னந்தானொன்று
பறகாமற் சூரணித்து வைத்துக்கொண்டு
பலமைந்து கருப்புக்கட்டி பாகுகாய்ச்சே. (47)

பாகுதனிற் சூரணத்தைத் தூவித்தானும்
பசுநெய்தான் படிகாலும் விட்டுக்கிண்டி
வாகுபெற லேகியத்தைப் பதத்திறக்கி
மண்டலந்தா னுண்டுவர வியாதிதானும்
போகுமே வியாதிகளைச் சொல்லக்கேளு
புகழான முகவாதம் பக்கவாதம்
ஏகுமே முடவாதங் கால்கைவாதம்
இயலான வாதந்தீ ருஞ்சொன்னேனே. (48)

படிகாயத் தைலம்.

சொன்னதொரு சித்தகத்திச் சாறுநாழி
சுகமான எள்ளெண்ணெய் படிதான்நாழி
முன்னமுள்ள வேம்பாடம் பட்டைதானும்
முதலாகப் பலமொன்று நிறுத்துவாங்கி
கன்னல்போல் மூன்றையுமே ஒன்றாய்ச்சேர்த்து
கடுமையா யடுப்பெரித்துப் பதத்திறக்கி
நன்னயமாய்ப் பழந்துணியி லூட்டிப் புண்ணில்
நாட்டமுடன் போடப்புண் ணாறிப்போமே. ()

ஆறிவிடு மின்னுமொரு முறைதான் கேளு
அன்பான சீனியுடன் காசுக்கட்டி
நேரிலே வகைக்கிரண்டு களஞ்சுவாங்கி
நேராகக் குழியம்மி தன்னிலிட்டு
பாரிலே பொடிசெய்து சிமிளில்வைத்து
படிகாயத் திற்போட்டுப் பொதிந்துகட்ட
தேறியே குழிப்புண்ணும் ஆறிப்போகும்
சிறப்பாக யாகோபு திறஞ்சொன்னாரே. (50)

திறமாக இன்னமொரு வகைதான்கேளு
செகத்தோர்க்குத் தெரிந்ததொரு கஞ்சாக்கோரை
தறமாக வாயதுதான் பேசிடாமல்
தான்பிடிங்கிக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு
நிறமான பச்சைமஞ்சள் விரலி பத்தும்
நேர்மையுடன் மெழுகதுபோற் றனரைத்து
உறமான அயக்காண்டி காயவைத்து
உற்றதேங் காயெண்ணெய் தானும்விட்டே. ()

விட்டபின்பு மூன்மெழுகு கூடப்போட்டு
மேன்மையுடன் குழப்பியதைக் கிண்டிக்காய்ச்சி
பட்டதொரு படுகாயந் தன்னிலேதான்
பண்புடனே நெற்கனமாய்ப் பொதிந்துகட்ட
மட்டமதாய்ப் புணணதுவும் ஆறிப்போகும்
வகையாக ஒருவாரங் கட்டவேண்டும்
திட்டமதா யாகோபு சொன்ன நீதி
திறமாகச் செய்தறிந்து செய்வாய்தானே. (52)

கர்ப்ப மெழுகு.

தானென்ற பிள்ளையுமொன் றிரண்டுபெற்று
தக்கபடி பின்புபிள்ளை யில்லாவிட்டால்
கானென்ற மெழுகதுவுஞ் சொல்லக்கேளு
கருவான பொரிக்காரம் பெருங்காயந்தான்
நானென்ற தேங்காயும் நாற்க ளஞ்சு
நலமுள்ள நேர்வாளங் கொஞ்சமிட்டு
தேனென்ற பழச்சாறு விட்டரைத்துத்
திகழ்சுண்டைக் காயளவா யுண்டைசெய்யே ()

செய்பாகத் தோடேநீ சிமிளில்வைத்து
சிறப்பாக ஆறுபொழு துண்டாராகில்
கைபாகத் துடனேதான் கருவுண்டாகும்
கனத்தமக்கள் பதினாறும் பெற்றுவாழ்வர்
மெய்பாகத் துடனேதான் பசித்தோர்க்கன்னம்
விளங்கிவர நாளடைவிற் பொருளுஞ்சேரும்
பொய்போகா தென்வார்த்தை செய்துபாரு
பூவுலகோர்க் காகயாக் கோட்சொன்னேனே. ()

சொன்னபடி செய்தோர்க்கு லாபமுண்டாம்
சுகமாக வைத்தியமுந் நூறிலேதான்
நன்னயமாய்ச் செய்பாகத் துடனேதானும்
நன்மைபெற வெகுமுறைகள் சொல்லிவிட்டேன்
முன்னமுள்ள முந்நூறைக் குறுக்கித்தானும்
முக்கியமாய் ஐம்பத்து ஐந்துமட்டும்
கன்னல்போல் வெளியாகத் திறந்துசொன்னேன்
கருவறிந்த யாகோபு நூல்தான் முற்றே. (55)

வைத்திய சூஸ்திரம் 55.

முற்றிற்று.

---

இந்த யாகோபு சொல்லிய பதினேழு சாஸ்திரங்களிலும் வியாதிகளுக்குக் கடுமையான சுண்ணம் செந்தூரம் பற்பங்கள் செய்து கொடுக்கும்படி சொல்லியிருக்கிறது. இந்த வைத்திய சூஸ்திரம் ஐம்பத்தைந்தில் மட்டும் கைபாகமான மருந்துகளும் சூட்சம வைத்தியங்களும் சொல்லியிருக்கிறார். இதை ஒவ்வொருவருங் கவனித்து இம்மருந்துகளைச் செய்து கொடுத்தால் சுலபத்தில் வியாதி தீர்ந்து அனுகூலமாகுமென்று கண்டிருக்கிறது

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# இடை பாகம் 16.

## காப்பு.

சருவசீவ தயாபரனுர் பாதம்போற்றி
சரியான நபிமார்கள் பாதம்போற்றி
பருவமா யெல்லாமும் பாடித்தேர்ந்து
பரிகரித்தே னிடைபாக மில்லையென்று
கருவமாய்ப் பதினாறு பாட்டாய்ச் சொன்னேன்
கனமான பாகமிதைக் கண்டுகொண்டால்
பெறுவார்கள் பிள்ளைபோல் செயபுமார்க்கம்
பேசரிது யாகோபு சொன்னவாறே..

சொன்னதொரு சத்துக்கு மார்க்கங்கேளு
சொற்பெரிய துருசுலொச் சத்துமில்லை
நன்னயமாய்த் துருசுக்குக் கெந்திமுக்கால்
நாடியே சேர்த்தரைக்க நல்லசததாம்
கன்னல்போல் செம்பாகுஞ் செம்பெடுத்தால்
காரியமாய் ரவிதன்லே வேதையாகும்
இன்னிலத்தி லின்னிரைக்குச் செய்யாப்போனுல்
யிதமான வர்ணமில்லை யியன்றுபாரே. (1)

இயன்றுபார் துருசுக்குக் கெந்திதானும்
யிதமாக யிடைபாகந் தப்பிரெம்ப
அயன்றுமே சேர்த்தாக்கால் சத்துதானும்
அடைவர்கப் புடம்போட்டு உருக்கிப்பார்த்தால்
நயன்றுமே கருப்பாகும் யிச்சத்தில்தான்
நயமில்லை செம்புதான் வரமாட்டாது
கயன்றுமே வெகுபாடு பட்டுருக்கக்
கனிவான செம்பெடுத்தால் வர்ணங்கேளே (2)

வருணமென்ன கொஞ்சம்போற் காணும்பாரு
வகையான தங்கத்தைச் சோத்தார்கேளு
கரணமாய்க் கொஞ்சமாய் லாபங்காணும்
கனமாக யிப்படிக்குச் செய்யாமற்றூன்
தருணமாய்த் துருசுக்கு முக்கால்கெந்தி
தாட்டிகமாய்ச் சோத்து அரை பழச்சாற்றுலே
பாணமாய் வில்லைகட்டி முன் னூல்சொன்ன
படியாகப் போட்டுமே சொல்லக்கேளே. (3)

சொல்லவே போட்டவுடன் கருப்பாய் நிற்கும்
துடியாக வெங்காரஞ் சேர்த்தரைத்து
நல்லவே புடமிட்டுக் குகையிலிட்டு
நாடியே உருக்காதே நாளந்தன்னில்
மெல்லவே உருக்கிடவே செம்புமாகும்
மேதினியி லிப்படிக்குச் செய்யாப்போனல்
கல்லவே செம்புதான் வரமாட்டாது
கருணைபெற நூல்பொய்யாய்ப் போகுந்தானே (4)

போகாமல் முன்சொன்ன முறையைப்போலே
போக்கோடே முன்கணக்குப் போலேசத்து
வாகாம லெடுத்துமே செம்பெடுத்தால்
வகையான வெள்ளிக்குப் பரிட்சைகேளு
தாகாமல் வெள்ளிதனைக் கடையில்வாங்கி
தாட்டிகமா யதைநம்பிச் செம்புதன்னை
ஏகாமற் கொடுக்கவே வேண்டாமென்று
யிருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (5)

இதமாக வெள்ளிக்கு யிடையேவங்கம்
ஏத்தமாய்க் கொடுத்தாது பின்புநீயும்
அதமாக அதையெடுத்து ஆட்டெலும்பில்
அடைவாக வைத்துமே கணக்காயூது
விதமாகக் கொஞ்சமெடு கரியில்வைத்து
வீற்றிருந்து உருக்கிப்பாரய்ய நினைறல்
பதமாகக் குதித்தாடும் பருவங்கண்டு
பதையாமல் பின்னுமே ஊதித்தீரே. (6)

ஊதிட்டு வெள்ளிதனை யெடுத்துப்பாரு
உத்துமே சாம்பல்வர்ணங் கண்டாற்கேளு
காதிட்டுச் செம்பிருக்கும் பின்னும்நீயும்
கருதியே வங்கத்தைக் கொடுத்துஊது
நாதிட்டு எடுத்துமே உருக்கிக்கொண்டு
நலமாகக் கரியில்வைத்துக் காய்ச்சிப்பாரு
சேதிட்டு யீயந்தா னிருந்துதென்றால்
சிறப்பாக யிடைக்குமது சிறப்பைக்கேளே. (7)

சிறப்பாகச் செப்பிருந்தால் சாம்பல்வர்ணம்
செழுமையா யிக்குற்றம் நீக்கிப்பின்பு
அறப்பாக மூன்றெடுத்த சத்துச்செம்பை
அன்பாக எட்டுக்கு ரெண்டுசேரு
குறிப்பாகப் பொன்போலே உருகியாடும்
கொள்கைகண்டு பின்னுமதை யெடுத்து நீயும்
விறிப்பாக மட்டமிடை தங்கந்தாக்கு
விதமாகச் சேர்த்துருக்கி யெடுத்துக்கொள்ளே (8)

எடுத்துமே பார்த்தவுடன் தாயைப்போல
யிதமாக யிருந்துவிடும் யில்லாப்போனால்
அடுத்துமே நீபோட்ட மட்டத்துக்கு
அடைவாகத் தங்கமது பாதிசேர்த்தால்
படுத்துவிடு மாததுவுங் காணும்பாரு
பழையாகும் புடத்துக்குத் தங்கமில்லை
உடுத்துமே வாதந்தான் மிகவுஞ்சுட்டு
ஊதாரி யாயலைந்து உலைகுவானே (9)

தங்க சுத்தி.

உலையாமல் தங்கத்தை மிகவுஞ்சேர்த்து
ஓதினது போலேதா னொழுங்குபண்ணு
அலையாமல் தங்கசுத்தி தன்னைக்கேளு
ஆதியாந் தங்கத்தைத் தகடுதட்டி
கலையாமல் பழச்சாறு கற்காவி தன்னைக்
காணவே மிகவரைத்துத் தகட்டிற்பூசி
நிலையாகக் கரியோட்டிற் காய்ச்சிநீயும்
நேராக அதின்குழம்பில் தோய்த்திடாயே (10)

தோச்சிட்டுத் தங்கத்தைத் தட்டிப்பாரு
தூளாக யிரண்டாக மூறியுங்கண்டாய்
வாச்சிட்டு தென்றுசொல்லி மனதிலெண்ணி
வகையான மட்டம்வந்த யிடத்தில் நீயும்
பாச்சிட்டுச் சேர்த்துமே உருக்கிப்பாரு
பதிவாகத் தங்கமாம் பாரிலோர்க்கு
ஏச்சிட்டுத் திரியாமல் பாகமாக
யிதமாகச் செய்திடவே யியற்கையாமே. (11)

இயற்கையா யிப்படிக்குச் செய்து நீயும்
யேற்றமாய்ப் புடம்போட அருகுகட்டும்
அயற்கையிலாச் செய்துவர ஒன்றுதப்பில்
அனுதியாய் மட்டமெல்லாம் வீணுய்ப்போகும்
கயற்கையாய் பஞ்சமித்திர மூந்நூறுதன்னில்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் கண்டுகொள்ளு
நயற்கையாய் சத்தெடுத்துச் செம்பெடுத்தால்
நயமாக இப்படிக்குச் செய்திடாயே (12)

செய்திடவே யென் னூல்கள் பதினேழ்தன்னில்
சிறப்பாகச் சத்தெடுக்கக் கெந்திசொன்னேன்
பைதிடவே கெந்தியைத்தான் அதிகமாகப்
பதமாகச் சேர்த்தாக்கால் முருக்குப்போலே
நைதிடவே தூளாகுஞ் செம்புதானும்
நலமாக உருகாது நாட்டிலோற்கு
உய்திடவே யிந்நூலு பதினறுதன்னில்
ஒதினேன் கணக்கறிந்து யிதமாய்ச்செய்யே. ()

இதமாகச்சுண்ணமென்ற அறுநூறுதன்னில்
யியற்கையாய் நீதினத்தை எளிதிற்சொன்னேன்
அதமாகத் துரிசினுட சுண்ணம் வைத்தால்
அடைவாகக் கோடிலெச்சம் நிமைமுன் தாண்டும்
பதமாக நவலோக மெல்லாந்தானும்
படுமுன்னே பழுத்துவிடும் பாரிலோர்க்கு
அதிகமாய் நபியார்க்குச் சுண்ணவேலை
யாகுமென்று யாகோபு சொன்னர்பாரே. (14)

ஆகுமே சத்துள்ள செம்பெடுத்தால்
அடைவாக உலகத்தோர்க் காகும்பாரு
தாகுமே யிந்த நூல் பதினாறுதன்னில்
வடிவாகச் சொல்லிவிட்டேன் வழக்கங்கண்டு
தாகுமே சத்தினுட செம்பறிந்து
தாய்சேர்க்கும் வகையறிந்து செய்தானானல்
பாகுபெற ராசாவா யிவனிருப்பான்
பக்குவமாய்ச் செய்தாக்கால் பலனுண்டாமே,(15)

பலமுண்டாஞ் செய்பாக வரிசையோடு
பக்குவமாய் நூல்வழியின் முறையேசெய்தால்
நலமுண்டாம் பற்பம் செந்தூரத்தோடு
நல்லதொரு வகாரமதைத் தெரியாமற்றான்
நிலமதனிற் றானிருந்து முடிக்கவேண்டும்
நீனிலத்தி லுனக்கீடு உண்டோசொல்லு
தலமதனிற் பேர்கொண்டு யாக்கோப்சொன்ன
சங்கதிகள் பொய்போகா பதினாறுமுற்றே. (16)

இடைபாகம்—16,

முற்றிற்று.

——

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

# செய்பாகம்-16.

காப்பு.

அண்டபிண்டந் தானிறைந்த வெளியைப்போற்றி
அன்பான ரகுமானின் பாதம்போற்றி
தண்டமிழ்நா தாக்களுட பாதம்போற்றி
தாயான பராபரையா ளருளினாலே
கண்டுமே நான்செய்த நூல்கடன்னில்
கைபாக வரிசைதனைக் காட்டுதற்கு
மண்டலத்தி லெந்தனுக்கு உபதேசித்த
மகாநபிமார் பாதமதை வணங்கிப்போற்றே.

போற்றியே கைபாகஞ் சொல்லக்கேளு
பூதலத்து மாண்பர்களில் வெகுபேரப்பா
ஏற்றியே இடைபாகம் கைபாகங்கள்
இயல்பாகத் தெரியாமல் மருந்தைச்சுட்டு
சேற்றிலே விழுந்தெழுந் தவன்போலாகத்
தேசமெங்குஞ் சுற்றியே திரிந்துகொண்டு
நாற்றிசையுஞ் சித்தனெனப் பெயர்வகித்து
நாட்டிலே திரிந்தலைவார் வெகுபேர்தானே. (1)

தானென்ற கெவிரிலிங்கம் சூதந்தானும்
தாளகமும் துருசுமனோ சிலையினோடு
நானென்ற கெந்தகமும் பாஷாணங்கள்
நலமான வீரமொடு பூரந்தானும்
வேனென்ற புகைச்சரக்கு யிவைகளாகும்
மேதினியோர் வகையில்லாப் புடத்திலிட்டு
வானென்றே புகைத்துவிட்டு வெளியாய்ப்போனார்
மகத்தான கைபாக வரிசைதானே. (2)

தானென்ற தங்கம்வெள்ளி செம்புவங்கம்
சரியான வெள்வங்கம் அயமும்நாகம்
தேனென்ற குடவன்வெங் கலமுந்தானும்
செயமான உருக்கினங்க ளாகும்பாரு
நானென்ற திவையாவும் பற்பம்சுண்ணம்
நலமான செந்தூர மாகவென்றால்
கோனென்ற குருமுறையும் இடைபாகங்கள்
குறிப்பாகக் கைபாக வரிசைபாரே. (3)

பாரே நீ புகைச்சரக்கும் உருக்கினமும்
பக்குவமா யொவ்வொன்றும் பாகமாக
நேரேதான் துண்டுதுண்டாய்ச் சுத்திசெய்து
நேர்மையுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
தேரேதான் பஞ்சமித் திரங்கள்செய்து
சீராகச் சுண்ணமது செய்யவென்றால்
வேரேதான் அறுநூறு சுண்ணந்தன்னில்
மிகவேநான் கண்டபடி விடாமற்செய்யே. (4)

செய்துவரப் பாகமது தவறிப்போனால்
சிறப்பாகச் சுண்ணமுந் நூறும்பாரு
உய்வதற்கு இடைபாகந் தவறிற்றானால்
உண்மையாய் நூற்றியைம்பத் தைந்தும்பாரு
மெய்யாகப் புடத்திறசந் தேகம்வந்தால்
மிகவேதான் ஐம்பத்தி எழிற்றானும்
கைபாக மிதுதான்பார் சொல்லிவைத்தேன்
காசினியில் யாகோபு திடமாய்த்தானே. (5)

திடமாகச் சுண்ணமது செய்வதற்குச்
சேர்ந்ததொரு நூலதுவுந் தெரியச்செய்தேன்
புடமாறிப் போயதுவுங் கருத்துதானால்
புண்பட்டு வெளியேதா னெறிந்திடாதே
அடைவாகச் சுண்ணமது முடிவதற்கு
அன்பாக நூல்தானுஞ் சொல்லிவைத்தேன்
பெடமாக நூலினுட போக்கறிந்து
பேணியே மறுபடியும் புடந்தான்போடே. (6)

மறுபடியும் குறைநிறையச் சரியதாக்கி
வலுவாகப் புடம்போட்டு யெடுத்தாயானல்
சரியான மல்லிகைப்பூப் போலேசுண்ணம்
தானகும் வாச்சுதென்று யெடுத்துக்கொள்வாய்
திருவான பெரியோர்க்கு அன்னதானஞ்
செய்துவா யெடுத்தகா ரியங்கைகூடும்
குருவாக யாகோபு வெளியாய்ச்சொன்னேன்
குவலையத்தோர் பொருத்தருளக் கூறினேனே (

பொருத்தமுள்ள செந்தூரஞ் செய்யவென்ருல்
புகழான எழுநூற்றின் படியேசெய்வாய்
திருத்தமுள்ள கைபாகந் தவறிக்கெட்டால்
செந்தூர மூந்நூற்றில் தேறிச்செய்வாய்
அருத்தமுள்ள ததுவினிலே பிசகிற்ருனல்
அன்பான நூற்றிஐம்பத் தைந்துதன்னை
கருத்தாகச் சொல்லிவைததேன் கூர்ந்துபார்த்து
கணக்காக அதின்படி நீ போற்றிச்செய்யே (8)

போற்றியே செய்துவரப் பாகந்தப்பில்
புகழான நுணுக்கமது தெரிவதற்கு
தேற்றியே ஐம்பத்தைந் ததிலேதானும்
செய்பாக வரிசையுடன் சொல்லிவிட்டேன்
ஏற்றியே யிந்நான்கு நூலைத்தானும்
இனிமையுடன் பார்த்தாக்கால் செந்தூரங்கள்
நாற்றிசையோ ரறியவே செய்துகொள்வாய்
நாதாந்த யாகோபு சொன்னேன்பாரே. (9)

சொன்னதொரு செந்தூரஞ் செய்யும்போது
சுகமான செந்தூர மாகாமற்ருன்
பின்னமது தானகிக் கரியதாகிப்
பேசரிய செந்தூரங் கெட்டதானல்
முன்னமே வேலைசெய்து வைத்ததெல்லாம்
மூதண்டக் கோபத்தா லெறிந்திடாதே
நன்னயமாய்ச் செந்தூர முடிவதற்கு
நான்குநூல் சொல்லிவைத்தேன் நன்ருய்ப்பாரே. (10)

நன்ருக நூல்தனையும் உற்றுப்பாரு
தன்மைபெற இடைபாகம் புடபாகங்கள்
குன்ருமல் சரியாகச் செய்துதானும்
கொண்டுவரும் போதினிலே கெட்டதாளுல்
ஒன்ருலும் பலவாலும் யெறிந்திடாதே
உண்மையுடன் அந்தந்த நூலைப்பார்த்து
மன்ருடி அம்மருந்தைப் புடத்தில்வைக்க
வாச்சுவிடுஞ் செந்தூர மகிமை பாரே. (11)

செந்தூரஞ் சுண்ணமுந்தான் செய்யுதற்குச்
சிறப்பான வழிதனையுஞ் சொல்லிவிட்டேன்
கொந்துகொந்தாய் வகாரமது செய்யுதற்குக்
குறிப்பாகப் பஞ்சமித்திர மூந்நூறுசொன்னேன்
வந்தந்த நூல்தனிலே வகாரவேலை
மகாசுழிவாய்ச் செய்வதற்கு வழியுஞ்சொன்னேன்
முந்தந்த நூலினுட முறையேசெய்தால்
முக்கியமாய் வகாரமது முடியுந்தானே. (12)

முடியையிலே பக்குவங்கள் வராதேபோனல்
மூந்நூறு வகாரத்தின் களங்கைப்பாரு
கடிகையதிற் ருன்முடியும் தவறிற்ருனல்
களங்கினுட சூத்திரமைம் பதுவும்பாரு
படிகம்போற் ருன்முடியும் வினையத்தோடு
பார்த்திடுவா யிடைபாகம் பதினுறைத்தான்
அடியான மாற்றதுவும் வந்தேதேறும்
சொல்லிவிட்டேன் யாகோபு துணிவாய்ப்பாரே. (13)

பாரே நீ வைத்தியங்கள் செய்வதற்குப்
பரிவாக நானூறு விரித்துச்சொன்னேன்
தேரேதா னதைக்குறுக்கி மூந்நூறுஞ்சொன்னேன்
சித்தான தண்டகமாம் நூற்றிப்பத்தும்
நேரேநான் சொல்லிவிட்டே னதைக்குறுக்கி
நேர்த்தியாய் ஐம்பத்தி யைந்துஞ்சொன்னேன்
வேரேதான் மருந்துகளுங் கெட்டுப்போனல்
மேலான எழுநூற்றின் சத்தைப்பாரே. (14)

சத்தான நால்நூலும் பார்த்துக்கொண்டால்
சரியாக வகாரமது முடியுமப்பா
சித்தான திராவகங்கள் செய்யுதற்குச்
சிறப்பான எழுநூற்றை விடவேறில்லை
மூத்தான வைத்தியங்கள் செய்யுதற்கு
முக்கியமாம் லேகியங்கள் பதங்கம் மாத்திரை
வித்தான தயிலமொடு குழம்பு சூரணம்
மெழுகுடனே கியாழமது செய்யக்கேளே. (15)

செய்யவே பதினாறு நூலும்பார்த்துத்
தேறியே மருந்துகளுஞ் செய்யவேண்டும்
உய்யவே நூலினுட நுட்பங்கண்டு
உண்மைகண்டு இடைபார்க்கம் புடமுங்கண்டு
பையவே கைபாகஞ் செய்பாகங்கள்
பார்த்தறிந்து மருந்துகளைச் செய்வாயென்று
ஐயமிலா யாகோபு உலகத்தோர்க்கு
அருமையாய்ச் சொல்லிவைத்தேன் பதினாறுமுற்றே. (16)

செய்பாகம்—16.

முற்றிற்று.

# யாகோபு தண்டகம் 110க்கு அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மந்திரம் ... ... | 6 |
| 2. | சிதம்பரச்சக்கரம் ... ... | 8 |
| 3. | தண்டகக்குரு ... ... | 13 |
| 4. | நூல் விபரம் ... ... | 17 |
| 5. | காப்பு ... ... | 29 |
| 6. | சயகாசத்துக்குச் செந்தூரம் ... | ,, |
| 7. | நீரிழிவுக்குச் செந்தூரம் ... | 30 |
| 8. | மூலமுளைக்குக் குளம்பு ... | 31 |
| 9. | கண்டமாலைக்குக் களிம்பு ... | 32 |
| 10. | கபாலவாய்வுக்குச் சூரணம் ... | ,, |
| 11. | உஷ்ணவாய்வுக்குச் சூரணம் ... | 33 |
| 12. | காப்பச்சூரணம் ... ... | 34 |
| 13. | மருந்தீடுமுறியச் சூரணம் ... | ,, |
| 14. | சன்னிக்குக் குழம்பு ... | 35 |
| 15. | கர்ப்பச்சூரணம் ... | ,, |
| 16. | மருந்து முறிவுக்கு கியாழம் ... | 36 |
| 17. | ஈளைகாசத்துக்குத் தைலம் ... | 37 |
| 18. | வெள்ளெழுத்துக்குத் தைலம் ... | 38 |
| 19. | பச்சைவாதத்திற்குப் பற்பம் ... | 39 |
| 20. | இரத்தப்பிரமேகத்திற்குப் பற்பம் | ,, |
| 21. | கற்பத்திற்கு வங்கபற்பம் ... | 40 |
| 22. | முகவாதத்திற்கு லேகியம் ... | 41 |
| 23. | படுகாயத் தைலம் ... | ,, |
| 24. | கற்பம் மெழுகு ... | 42 |
| 25. | காப்பு ... | 44 |
| 27. | தங்கசுத்தி ... | 45 |

## இராமதேவராயிருந்து மக்கத்திற்குப் போனபின்பு யாகோபு என்று பேர்வகித்துச் சொல்லிய சாஸ்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| வைத்திய சிந்தாமணி 700ம் | | | |
| ஷை குருநூல்55-ம் | 1 | 2 | 0 |
| சுண்ணக்காண்டம் 600 | 1 | 0 | 0 |
| சுண்ணம் 300 | 0 | 8 | 0 |
| சுண்ண சூஸ்திரம் 155ம் | | | |
| சுருக்கம் 55 ம் | 0 | 8 | 0 |
| லோக செந்தூரம் 300 | 0 | 8 | 0 |
| செந்தூர சூஸ்திரம் 150 | | | |
| ஷை சுருக்கம் 55 ம் | 0 | 8 | 0 |
| ஷை வைத்தியம் 300 ம் | | | |
| சரக்குச் சுத்தியும் நாடியும் | 0 | 8 | 0 |
| வாத சூஸ்திரம் 400 | 0 | 12 | 0 |
| வகாரக் களங்கு 300 | 0 | 8 | 0 |
| பஞ்சமித்திரம் 300 | 0 | 8 | 0 |
| ஷை தண்டகம் 110 ம் | | | |
| வைத்திய சூஸ்திரம் 55-ம் | | | |
| இடைபாகம் 16 ம் | | | |
| செய்பாகம் 16-ம் | 0 | 8 | 0 |
| 12 இந்தப் பதினேழு நூலுக்குந் திறவுகோலாகிய யாகோபு கல்லாடம் அரும்பதவுரை | 0 | 12 | 0 |

மேல்கண்ட பதினேழு சாஸ்திரங்களும் சேர்ந்த ஒரே கட்டடம் காலிகோ பயிண்டுபுக் 1க்கு ரூ. 9 0 0

## ஓலை யேட்டுப்பிரதியிலிருந்து இப்பொழுது புதிதாய் அச்சிட்டிருக்கிற அகஸ்தியர் சாஸ்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பரிபூரணம் 1200 | 2 | 0 | 0 |
| பூரணம் 205 | 0 | 8 | 0 |
| பூரணசூஸ்திரம் 216 | 0 | 8 | 0 |
| பரிபாஷை 300 | 0 | 8 | 0 |
| பன்னிருகாண்டம் வைத்தியம் | 0 | 8 | 0 |
| தற்கசாஸ்திரம் 300 | 0 | 10 | 0 |
| கற்ப முப்புக்குருநூல் | 0 | 8 | 0 |
| ஷை பூஜாவிதி 200 ம் | | | |
| ஞானசைதன்யம் 51-ம் | 0 | 8 | 0 |
| கௌமதிநூல் 400 | 0 | 10 | 0 |
| மணக்கோலம் 200 | | | |
| கனகமணி 100 | | | |
| வைத்தியத்திரட்டு 125, வைத்தியக்கோவை 81, கிருக்கு சாஸ்திரமென்னும் கிரிகை நூல் 64, ஆக ஐந்து சாஸ்திரங்கள் சேர்ந்தது. | 0 | 12 | 0 |

# யாகோபு முனிவரின் வரலாறு.

இம்முனிவர் ஆதியில் பதினெண் சித்தர்கூட்டங்களுடன் இராம தேவரென்ற பெயருடனிருந்து கற்பம், நிகண்டு, வைத்தியம், ஞானம், கரிசல், தைலம் மாந்திரீகம், ஜாலம், முதலிய இன்னும் அநேக நூல்கள் பாடியபின் கெவுனகுளிகையிட்டு ஆகாயத்திலெழும்பி ககன மார்க்கமாய் மக்காதேசத்துக்குப்போய்ச் சேர்ந்து அங்கு மகமதியர் களில் குருவான நபிமார்களுடன் தமிழ் சாஸ்திரத்திலும் மகமதியர் சாஸ்திரத்திலும் உள்ள ரகசியங்களைக் கலந்து பேசி அதில் முக்கியமான அகாரம், உகாரம், என்பதும், அசன், உசன் என்பதும் இன்னதெனப் பேசி உறுதிபெற்று நபிமார்கள் சந்தோஷமடைந்து இராமதேவருக்கு மகமதியர் சாஸ்திரப்படி சுன்னத்துச் செய்து யாகோபு யெனப்பெய ரிட்டு தொப்பியுங்கொடுத்து மகமதியர் மதத்தில் சேர்த்துப் பள்ளி யில் வைத்துக்கொண்டார்கள். யாகோபு யெனப் பெயரானபின் சித்த வைத்தியம், யூனானி வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் முதலான முறைகளை அநுசரித்து யாவரும் எளிதில் உணரும்படியாய் முதலில் யாகோபு சிந்தாமணி 700 என்ற சாஸ்திரத்தைப்பாடி அதில் வைத்தி யர்களுக்காக அநேக முறைகள் லெகுவாக அருத்தம் பண்ணிக்கொள் ளவும். மருந்துகள் செய்து முடிக்கவும், சிக்குகளை குணமாக்கு விதங்களும் வாதமுறை கண்டிப்பாய் முடியுமென நிச்சயமான நூல் களைப் பாடியிருக்கிறார். ஷையாரால் பள்ளியிலிருந்து பாடிய பதினேழு சாஸ்திரங்களும் கிடைக்கப்பெற்று அச்சிட்டிருக்கிறது.

குறிப்பு:—யாகோபாக யிருந்தபின் அகஸ்திய முனிவரால் இந்த யாகோபு முனிவருக்கு தேரையரெனப் பெயர் உண்டானதாகத் தெரிகிறது.

உ

பரமபதி துணை.

# புதிய புத்தக கேட்லாக்

## இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி,

( இது ஓர் பெரிய வைத்திய அகராதி. )

பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்கள், பஞ்சபூதச் சரக்குகள், உபரசச் சரக்குகள், 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகைகள் உப்பாகுஞ்சரக்குகளின் விபரமும், மருந்துகள் செய்யச் சரக்குகளின் சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரமும், 64 பாஷாணங்களின் பெயர்களும், அதற்கு சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும், 4448வியாதிகளின் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தைப் பார்க்க வேண்டிய தவசியம். 280 பக்கங்கள் கொண்டது. புத்தகம் 1க்கு ரூ 2...0...0

## அகத்தியர் பரிபாஷை 300,

ஓலைச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் அச்சிட்டு வெளிவந்தது (பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் முன்னம் இருந்து வருவதில் இது பின்பாகம் மூன்று காண்டங்கள் புதிதாக இப்பொழுது அச்சிட்டது புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் கற்ப மூப்புக் குருநூல்

இதில் கற்பம், கற்ப தீட்சை, முப்பூ முடிக்கும் விபரம், பற்பம் செந்தூர முறைகள், சுண்ணம், மெழுகு, தைலம், வாலை பூஜா விதிகளும் தெளிவாகச் சொல்லியது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் இதுவரையும் வெளி வராதது இதில் ஞானம், யோகம், இன்னதென அவரவர்களே எளிதில் தெரிந்து கொள்வதுடன் தன்னைத் தானறிந்து ஞான யோக சாதனை யடைந்து கற்ப தேகி யாகும் விபரங்களும் சொல்லி யுள்ளது. புத்தகம் 1க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம். வைத்திய காண்டம், வாத காண்டம், சுண்ணக் காண்டம், செந்தூரக் காண்டம், பற்ப காண்டம், தைலக் காண்டம், கற்ப காண்டம், யோக ஞான காண்டம், தீட்சா விதிகாண்டம், சாபநிவர்த்தி காண்டம், ஜால காண்டம், மந்திர காண்டம், ஆக 12 காண்டங்கள் புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிறுக்கு நூல் என்னும் கிரிகை சாஸ்திரம் ஆக 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாசாணங்க ளில்லாது கடைச் சரக்குகளைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்களையும் தீர்க்கும் முறைகளைச்சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களும், தெளிவாகக் கூறியுள்ள அரிய சாஸ்திரம். இதுவரை வெளிவராத நூல், புத்தகம் 1க்கு அணா 0...12...0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தானுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.
புத்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

# அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் ஏட்டுப் பிரதியாக அனுபவத்தில் யிருந்து வந்தது இம் முறைகளை யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம், மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க பாகங்களாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இதில் பதினெண் சித்தர்களால் பாடிய நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அதிலுள்ள மர்மமான பதங்களை புலத்தியர் கேட்க அதன் தாத்பரியங்களை தெளிவாக சொல்லியது.

புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## அகத்தியர் பூஜா விதி 200.

## ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் ஷை பூசையும் அட்ட கன்ம பூசா விபரங்களும், தேவி பூசா மார்க்கமும், மவுன யோக ஞான சாதன விபரமாய்க் கூறியுள்ளது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் வகார சூத்திரம் 200.

### ஷை சுருக்கம் 100ம் சேர்ந்தது.

இதில் வகார முறைகளும், யேக மூலிகை யின்ன தென்ற விபரமும் குரு முடிக்கும் விபரமும் தெளிவாய் யாவருக்கும் நன்கு புலப்படு வண்ணம் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் மூலிகை என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியுமென்றும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும், இன்னு மநேக பரிபாஷைப் பெயர்களையும் விபரமாகச் யிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடு விதமும், அக்காலத்தில் ஏற்படும் சூடு சோபதாபங்களுக்கு வேண்டிய கிசாயங்களும், ஸ்நானம் செய்யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங்களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் செய்ய வேண்டிய முறையும், வாத முறைகளும், சுத்தி முறைகளும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம். புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது. இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 மட்டுந்தான் முன் அச்சிட்டிருக்கிறது இப்பொழுது இந்தப் பரிபாஷை 300 அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 மாத்திரம் முன் அச்சிட்டிருக்கிறது முதல் காண்டமும், நடுக்காண்டமும் இதுவரை கிடைக்காமலிருந்து இப்பொழுது நடுக்காண்டம் 500 மாத்திரம் ஒரு ஏட்டுப் பிரதி கிடைத்து அச்சிட்டிருக்கிறது.

புத்தகம். 1-க்கு விலை அணா 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷெயாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

ஞானவெட்டி 1500-க்கு சூஸ்திரமான

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் பூநீர் முப்பூ வழலை விபரங்களும், தெளிவாகக் கூறியுள்ளது புத்தகம் 1க்கு விலை அணா 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகம் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது புதிதாக அச்சிட்டது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இதில் ரசவாதத்துக் குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூர வேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தகத் தைலம், நாகரச கெந்தி, 'தைலத்தின் பெருமை, தங்க உரம், வெள்ளி உரம், செய்யும் முறைகளும். சரக்கு கட்டு வகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாக ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

# காகபுசண்டர் 1000.

இவர் பிரளயகாலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலத்தையும் பார்த்துவந்தவர். ஷியாரால்பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இதுவரை ஏட்டுப் பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250 - பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்றுபெயர் கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புத்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோக முதலிய விபரங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானையாகவும், பல சந்தங்களாக இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் சூட்சம மாயும் சொல்லியிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# இராமதேவர் சிவயோகம்

இதில் யோகம், நிஷ்டை மார்க்கம், வகாரம், மருந்து, பஞ்ச பூதங்களின் விபரம், முதலிய வகைகளை விபரமாகக் கூறியிருக்கிறது. 200 பாடல்கள் அடங்கியது. புத்தகம் 1க்கு விலை அணா 0...6...0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகள், சத்துரு மித்துருச் சரக்குகள், தைலமுறைகள், வைத்திய முறைகள், அஷ்டகர்ம விபரங்கள், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரம், பற்பம், செந்தூரம், சுண்ணம், செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை ரூ 1—0—0

### விஷ வைத்திய மென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பது ஆரூட சாஸ்திரங்கள் ஒரேபுத்தகமாகச் சேர்ந்துள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, முதலானவைகளால் விஷ மேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச் சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்கு எளிய முறைகளாய்ச் சமயோசிதம் போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. 392-பக்கங்கள் கொண்ட புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

### உலகரகசிய வெளிப்படை யென்னும்பஞ் சலட்சணத்

# திருமுக விலாசம்.

சோதிடர், வைத்யர், சாமியார், கோடாங்கி, தட்டார், தாசி, காசுக்கடைக்காரர், ஜவுளிக்கடைக்காரர், லேவாதேவி செய்வோர், முதலான வர்கள், தங்கள் சாமர்த்தியத்தால், பிறர்கள் தெரிந்துகொள்ளா வண்ணம், செய்யும் ஏமாற்றங்களையும், சாமர்த்தியங்களையும், வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறது இதை வாசிப்போர் கேட்போர் பிறர்களிடம் எவ்வகையிலும் ஏமாந்துவிடாது இருந்துகொள்ளலாம் விடாநகைப்பை உண்டு பண்ணும். ரூ 1—0—0

## கோரக்கர் மலைவள சாஸ்திர மென்னும்

# மலை வாகடம்.

இந்நூலில் திருவனந்தபுரம் மென்னும் மலையாள எல்கையி லிருந்து நீலகிரி மலை வரையிலு முள்ள எல்லா மலைகளையும், அம் மலைகளில் ஆங்காங்கு கிடைத்தற் கரிதாகிய பொருள்களையும், சித்தர்கள் குகை வாசஞ்செய்து வந்த இடங்களையும், முப்பூவின் மர்மங்களையும், உதகங்களின் விபரங்களையும், மூலிகை, கற்பம், இவைகளிருக்கு[illegible]ங்களையும், அவைகளை எடுத்து உபயோகிக்கு மார்க்கங்களையும் யா[illegible]ளிதில் தெரிந்து கொள்ளு வண்ணம் வசன ரூபமாகக் கூறி[illegible]து. கிளேஸ் கடிதம் புத்தகம் 1க்கு விலை ரூ 1...8...0

## சோலைமலை பெரிய அழகர் வர்ண[illegible]

இதில் சோலைமலையி லெழுந்தருளியிருக்கும் அழகமலைய[illegible]ரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், [illegible] சடஙம், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், [illegible]க்கு வந்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை போகும் [illegible]ராவும் வர்ணிப்பாகப் பாடியிருக்கிறது. விலை அணா 0—2—[illegible]

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்[illegible]

இது கோடாங்கி அடித்துக் குறிசொல்பவர்களுக்கும் [illegible]பாடிகளுக்கும், ஆருடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுப[illegible]கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் மிகவும் முக்[illegible]னது. புத்தகம் பாகம் 1-க்கு விலை அணா 0—2—0

## வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திர[illegible].

இதில் அநேக சித்தர்களால் பாடிய சாஸ்திரங்கள் சில்லரை ஏடுகளாயிருந்ததைச் சேகரித்து 10 பாகங்களாக அச்சிட்டிருக்கிறது பாகம் 1க்கு விலை ரூ. 1...4...0